இந்த விலைக்கழிவு நாரஹேன்பிட்ட எலைற்ரேடியோ காட்சியறையில் மற்றும் shop.eliteradio.com மூலமான கொள்வனவுகளுக்கு மட்டும் வழங்கப்படும்.
Ceiling
Pedestal
Table
Orbital
Wall
Exhaust
KDK SINCE 1909 JAPAN
அங்கீகரிக்கப்பட்ட ஏகவிநியோகஸ்தர்கள்
ELITERADIO Since 1959
facebook.com/kdksrilanka | shop.eliteradio.com
வார நாட்களில: 9:00am - 5:00pm | சனிக்கிழமை: 9:00am - 1:00pm

Follow us
# தமிழன்
THAMILAN தமிழன்
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
மலர் : 04, இதழ்: 09 சோபகிருது வருடம், ஆனி மாதம் 19ஆம் திகதி செவ்வாய்க்கிழமை
(04.07.2023) ஹிஜ்ரி 1444, துல்ஹஜ் - 15, 0115 886187 - பக்கங்கள் 10
விலை ரூ.50

BEAT the HEAT The Reliable Fan
1st July to 31st July 2023
DISCOUNT 15% (On selected models only) *Conditions apply
KDK SINCE 1909 JAPAN
Ceiling | Pedestal | Table | Orbital | Wall | Exhaust
அங்கீகரிக்கப்பட்ட ஏகவிநியோகஸ்தர்கள்
ELITERADIO Since 1959
Inquiries (011) 250 0823 | (011) 236 8472 / 73 / 74

# போலியான தர்க்கங்களை முன்வைக்க வேண்டாம்!

**நாட்டை முன்னேற்றி மக்களுக்கு நிவாரணம் வழங்க ஒன்றிணைவோம்**

**எதிர்க்கட்சித் தலைவர் தலைமையிலான எதிர்க்கட்சியினருக்கு ஜனாதிபதி அழைப்பு**



02 பக்கம்

## செவ்வாய் கிரகத்தில் உள்ளதை ஒத்த பாறைகள் இலங்கையில்?

### நாசா விஞ்ஞானிகள் ஆய்வு



நாசா விஞ்ஞானிகள் குழுவொன்று கற்பாறைகள் தொடர்பான ஆய்வுக்காக இலங்கை வந்துள்ளது.

நாசாவின் மூத்த விஞ்ஞானி சுனிதி கருணாதிலக தலைமையிலான நிபுணர்கள் குழு, இலங்கையில் உள்ள சில பாறை அமைப்புகளுக்கும் செவ்வாய்க் கிரகத்தில் காணப்படும்... 02 பக்கம்



## மரக்கறிகளின் விலை மலையகத்தில் உயர்வு

மலையகத்தில் தற்போது நிலவும் மழையுடன் கூடிய காலநிலை காரணமாக மரக்கறி உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில், மலையக விவசாயிகளினால் பயிரிடப்பட்டுள்ள மரக்கறிகளின் அறுவடைக் காலம் நெருங்கியுள்ள நிலையில் தொடர்ந்தும் அதிகரித்து வரும் மழையின் காரணமாக குறித்த மரக்கறிகள் அழுகிப்போவதற்கான... 02 பக்கம்

### கமெண்ட் கந்தர்...



ரெலோ இந்தியாவிட்ட கையும் மெய்யுமா மாட்டிட்டுது போல..!

## சீனித் தொழிற்சாலை தொடர்பில் யாரும் குத்தி முறிய வேண்டாம்!

### வேண்டாமென மக்கள் கூறினால் திருப்பி அனுப்புகிறோம் என்கிறார் செல்வம் எம்.பி



வவுனியா நிருபர்

சீனித் தொழிற்சாலை தொடர்பில் யாரும் குத்தி முறிய வேண்டாம். வவுனியா மக்கள் வேண்டாம் என்றால் திருப்பி அனுப்புகிறோம் என தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ) அமைப்பின் தலைவரும் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார். 02 பக்கம்

## சமையல் எரிவாயு விலை குறைப்பு 3000 ரூபாவுக்குள் வரையறுப்பு!

### லிட்ரோ நிறுவனம் அறிவிப்பு



லிட்ரோ எரிவாயு சிலிண்டரின் விலையை இன்று செவ்வாய்க்கிழமை (04) நள்ளிரவு முதல் குறைக்கவுள்ளதாக அந்த நிறுவனத்தின் தலைவர் முதித பீரிஸ் தெரிவித்துள்ளார். 02 பக்கம்

### உஷ்



பொலிஸ் மா அதிபர் சி.டி. விக்கிரமரத்னவின் பதவிக்காலத்தை மேலும் நீடிக்க ஜனாதிபதி ரணில் தீர்மானித்துள்ளதாக தகவல்.

3 மாத காலத்துக்கு இந்த சேவை நீடிப்பு வழங்கப்படலாமெனவும் இன்று நடைபெறவுள்ள தேசிய பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் தனது யோசனையை ஜனாதிபதி முன்வைக்கவுள்ளாரென அறியமுடிந்தது.

## விசேட வைத்தியர்கள் ஓய்வு வயதெல்லையை அதிகரிக்கும் யோசனை அமைச்சரவைக்கு

### இவ்வாரம் கெபினட்டுக்கு வரும்

விசேட வைத்தியர்களின் ஓய்வுபெறும் வயதெல்லையை 63 ஆக அதிகரிப்பதற்கான அமைச்சரவைப் பத்திரம் இந்த வாரம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

தற்போது அதிகரித்து வரும் வைத்தியர்களுக்கான வெற்றிடங்களை கருத்திற்கொண்டு இந்த தீர்மானம் முன்மொழியப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் ஜனக ஸ்ரீ சந்திரகுப்த குறிப்பிட்டுள்ளார்.

விசேட வைத்திய நிபுணர்களின் ஓய்வு பெறும் வயதெல்லையை 63 ஆக அதிகரிப்பதற்கு... 02 பக்கம்

## சில இடங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை

நாட்டில் தொடரும் மழையுடனான காலநிலை காரணமாக கண்டி, நுவரெலியா மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கண்டி மாவட்டத்தின் பஸ்பாகே கோரளை பிரதேசம், நுவரெலியா மாவட்டத்தின் அம்பகமுவ பிரதேசம் மற்றும் இரத்தினபுரி மாவட்டத்தின் நிவித்திகல பிரதேசத்தில் மண்சரிவு... 02 பக்கம்

## கடும் காற்றுடன் தொடர்ச்சியாக மழை மலையகத்தில் இயல்பு நிலை பாதிப்பு

ஆ.ரமேஸ்



நுவரெலியா மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள வானிலை மாற்றத்தினால் தொடர்ச்சியாக பெய்து வரும் காற்றுடன் கூடிய மழை காரணமாக இம் மாவட்டத்தில் அம்பகமுவ, கொத்மலை மற்றும் நுவரெலியா ஆகிய மூன்று பிரதேச செயலகப் பிரதேசங்களில் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

அதேநேரத்தில் அம்பகமுவ பிரதேச செயலகப் பகுதியில் ஹட்டன்... 02 பக்கம்

## ஜூன் மாதத்தில் 1 இலட்சம் சுற்றுலாப் பயணிகள் வருகை



கடந்த மாதத்துக்குள் சுமார் ஒரு இலட்சம் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இந்த வருடத்துக்குள் இதுவரை 6 இலட்சத்து 20 ஆயிரம் சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளதாக சுற்றுலா...

02 பக்கம்

## ஆயுர்வேத திருத்தச் சட்டத்தின் ஊடாக பாரம்பரிய மருத்துவம் அழிவடையும்!

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் எச்சரிக்கை



02 பக்கம்

## இளைஞன் மீது வன்புணர்வு மாகல்கந்தே சுதந்த தேரர் கைது

ஜப்பானில் உள்ள விகாரை ஒன்றில் இளைஞன் ஒருவரை வன்புணர்வுக்குட்படுத்த முயற்சித்த நிலையில் மாகல்கந்தே சுதந்த தேரர் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. சம்பவம் தொடர்பான காணொளியொன்றும் சமூக வலைத்தளங்களில் வைரலாக பரவிவருகின்றது.

இதன்போது விகாரைக்குள் நுழைந்த குறித்த இளைஞனின் உறவினர்கள் தேரருடன் வாக்குவாதத்தில் ஈடுபடுவதையும் தாக்குதலில் ஈடுபடுவதையும் காணக்கூடியதாகவுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பான காணொளியை முன்னாள் அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க தனது முகப்புத்தகத்தில் பதிவிட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## போலியான...

போலியான தர்க்கங்களை முன்வைத்து தோல்வியைத் தழுவிக் கொள்வதற்கு மாறாக நாட்டு மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக அரசாங்கத்துடன் இணைந்துகொள்ளுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்க்கட்சித் தலைவர் தலைமையிலான முழு எதிர்க்கட்சிக்கும் அழைப்பு விடுத்தார்.

தேசிய கடன் மறுசீரமைப்பு தொடர்பில் எதிர்கட்சியினால் முன்வைக்கப்பட்ட அனைத்துக் குற்றச்சாட்டுக்களும் உண்மைக்குப் புறம்பானதென தெரியவந்துள்ளதால் நாட்டை முன்னேற்றும் வேலைத்திட்டத்துக்கு பங்களிப்புச் செய்த பெருமையுடன் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்குவதற்கான வாய்ப்பை உருவாக்கிக்கொள்ளுமாறும் ஜனாதிபதி அழைப்பு விடுத்தார்.

அவசியம் எனில் பாராளுமன்ற சபாநாயகரிடத்தில் கலந்துரையாடி எதிர்க்கட்சியினருக்கு மேலதிக பொறுப்புக்களைப் பெற்றுக்கொடுக்கத் தயாராக இருப்பதாகவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீரவின் அரசியல் வாழ்க்கைக்கு 32 வருடங்கள் பூர்த்தியாவதை முன்னிட்டு ஹம்பாந்தோட்டை மக்களுக்கு நன்றி தெரிவிக்கும் முகமாக நேற்று (03) ஹம்பாந்தோட்டை மாகம் றுஹுணு மண்டபத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த "அமரவிரு அபிமன் 32" நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார். இதன்போது "அமரவிரு அபிமன் 32" நினைவுச் சின்னமும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் வழங்கி வைக்கப்பட்டது.

மாவட்டத்தில் விவசாய மேம்பாட்டுக்கு பங்களிப்புச் செய்தவர்களுக்கான அன்பளிப்புக்களும் புலமைப்பரிசில் பரீட்சை, க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை மற்றும் உயர்தரப் பரீட்சைகளில் சிறப்புச் சித்தி பெற்ற மாணவர்களுக்கும் ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் சிறந்த விளையாட்டுத் திறன்களை வெளிப்படுத்திய மாணவர்களுக்குமான அன்பளிப்புக்களும் இந்நிகழ்வின்போது வழங்கி வைக்கப்பட்டன.

ஜனாதிபதிக்கு நன்றி தெரிவிக்கும் முகமாக ஹம்பாந்தோட்டை மக்கள் சார்பாக நினைவுச் சின்னமொன்றை அமைச்சர் மஹிந்த அமரவீர ஜனாதிபதிக்கு வழங்கிவைத்த அதேநேரம் ஹம்பாந்தோட்டை மக்களுக்கு அமைச்சர் மஹிந்த அமரவீர, ஆற்றிய சேவைகளைப் பாராட்டும் வகையில் ஜனாதிபதியினால் அமைச்சருக்கு நினைவுச் சின்னமொன்றும் வழங்கி வைக்கப்பட்டது.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க,

“தனது 32 வருட அரசியல் வாழ்வில் 28 வருடங்களை பாராளுமன்ற அங்கத்துவத்துடன் கழித்துள்ள அமைச்சர் மஹிந்த அமரவீர, மக்களுக்கு சிறப்பான சேவைகள் பலவற்றை செய்துள்ளார். இவர் ஆளும் மற்றும் எதிர்க்கட்சி அரசியல் களம் தொடர்பான அனுபவங்கள் நிறைந்தவர் என்ற வகையில் முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேனவின் ஆட்சியில் இணைந்து பணியாற்றும் வாய்ப்பு கிடைத்திருந்தது.

அதேபோல் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் காலத்திலும் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டியதன் அவசியத்தை நான் வலியுறுத்தியிருந்தேன். முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ 2022 ஆம் ஆண்டில் அனைத்துக் கட்சிகளினதும் தலைவர்களை ஜனாதிபதி மாளிகைக்கு அழைத்திருந்தார். இறுதியில் ஐக்கிய மக்கள் சக்தியும், மக்கள் விடுதலை முன்னணியும் அந்தச் சந்திப்பை புறக்கணித்திருந்தன.

நானும், ஆர்.சம்பந்தனும், முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேனவும் அந்த சந்திப்பில் கலந்துகொண்டு பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான கலந்துரையாடல்களை முன்னெடுத்தோம்.

எவ்வாறாயினும் மே 09 நிகழ்வின் பின்னர் நாம் அனைவரையும் ஒன்றிணைக்க முற்பட்டோம். பிரதமர் பதவியைப் பொறுப்பேற்காவிட்டாலும் ஐக்கிய மக்கள் சக்தி எங்களுடைய வேலைத்திட்டங்களுடன் இணைந்துகொள்ளும் என எதிர்பார்த்தபோதும் அது நடக்கவில்லை. அதன் பின்பே தற்போதைய ஆளும் தரப்பை கட்டமைத்து எமது பணிகளை ஆரம்பித்தோம்.

நான் ஜனாதிபதியாகவும் பிரதமராக தினேஷ் குணவர்தனவும் பொறுப்பேற்றுக்கொண்ட அரசாங்கத்தின் விவசாய அமைச்சராக மஹிந்த அமரவீர தெரிவு செய்யப்பட்டார். விவசாயம் மற்றும் பொருளாதாரம் ஆகிய இரண்டும் முடங்கிக் கிடந்த காலத்திலேயே அவர் அமைச்சுப் பதவியை ஏற்றுக்கொண்டார்.

2023 ஆம் ஆண்டு தமிழ், சிங்கள புத்தாண்டுக்கு முன்னதாக நல்லதொரு விளைச்சலைப் பெற்றுக்கொள்ள முயற்சித்தோம். உணவுப் பாதுகாப்புக்கான குழுவொன்றையும் நிறுவினோம். ஆளும் மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அனைவருக்கும் அழைப்பு விடுத்தோம். எதிர்க்கட்சியினர் முன்வரவில்லை. இறுதியாக தன்னிறைவான விளைச்சல் கிடைத்த பின்னர் அதிகாரிகள் மக்களுக்கு அரிசியை பகிர்ந்தளித்தனர். அந்த நேரத்தில் தங்களால் பங்களிப்புச் செய்ய முடியாமல் போனமைக்காக எதிர்க்கட்சி உறுப்பினர்கள் வருத்தமடைந்தனர்.

மேற்படி பணிக்கு அர்ப்பணிப்புடன் பங்களிப்பை வழங்கிய அமைச்சர் மஹிந்த அமரவீரவுக்கும் அவரின் கீழான அதிகாரிகளுக்கும் நன்றி தெரிவிக்க வேண்டியது அவசியமாகும். விவசாயிகளுக்கு அவசியமான உரத்தை விரைந்து பெற்றுக்கொடுக்கும் இயலுமை எமக்கு கிட்டியது. அன்று நாம் நாட்டுக்கு வருகின்ற உரம், கப்பலில் இருந்து நேரடியாக விளைச்சல் நிலத்தை வந்தடையுமென உறுதி கூறினோம். உரம் கிடைத்தவுடன் அவற்றை விவசாயிகளுக்கு வழங்கினோம். அதனால் உணவு பாதுகாப்பையும் ஏற்படுத்திவிட்டு வறிய மக்களுக்கு சலுகை வழங்கவும் எம்மால் முடிந்தது.

தற்போது நாம் விவசாயத்தை முன்னேற்ற வேண்டிய கட்டாயத்தில் இருக்கின்ற அதேநேரம், ஏற்றுமதியை மையப்படுத்திய விவசாயத்தை வலுப்படுத்த வேண்டும். இதுவரையில் நாம் நமக்கு அவசியமான உணவு உற்பத்தியை மாத்திரமே மேற்கொண்டிருந்தோம். எதிர்வரும் நாட்களில் உலகத்தின் உணவுத் தேவைக்கு அவசியமான உற்பத்திகளையும் நாம் மேற்கொள்ள வேண்டியது அவசியமாகும். அதற்காகவே விவசாய நவீனமயப்படுத்தல் என்ற பாரிய வேலைத்திட்டத்தை முன்னெடுக்க வேண்டியுள்ளது.

அதேபோல் கால்நடை வளங்களை மேம்படுத்துவதற்கான விரிவான வேலைத்திட்டம் ஒன்றும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இந்நாட்டின் சிறந்த கால்நடை வள நிறுவனமான அம்பேவல நிறுவனம் ரிதீகமவில் தங்களுக்கான பண்ணையொன்றை பெற்றுத்தருமாறு கோரியுள்ளது. அப்பகுதியில் கால்நடை வளங்களை மேம்படுத்துவதற்கு அவசியமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இந்தியாவின் பிரதான நிறுவனங்களில் ஒன்றான "அமுல்" நிறுவனம் கால்நடை அபிவிருத்திச் சபையுடன் இணைந்த வேலைத்திட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளது. மேலும் சில நிறுவனங்களும் அதற்காக முன்வந்துள்ளன. வெளிநாடுகளிலிருந்து கால்நடை இறக்குமதி செய்யும் எண்ணம் எமக்கு இல்லை. அவ்வாறு கொண்டு வரப்பட்ட 25,000 கால்நடைகள் இறந்துவிட்டன. அதனால் மேற்படி பகுதிகளை அபிவிருத்தி செய்யும் பணிகளை அந்த நிறுவனங்களிடத்திலேயே ஒப்படைக்கவுள்ளோம். அதனால் பால் உற்பத்தித்துறை உள்ளிட்ட பல துறைகளை மேம்படுத்த முடியும்.

அதேபோல் முட்டை மற்றும் கோழி இறைச்சி இறக்குமதி செய்யப்படும். அதனை எம்மால் தனியாகச் செய்ய முடியாது. அதற்காக அரசாங்கம் மற்றும் தனியார் துறை இணைந்த வேலைத்திட்டம் ஒன்றை முன்னெடுக்க வேண்டிய அவசியம் உள்ளது.

நாட்டின் அபிவிருத்திக்காகவே இவற்றை செய்கிறோம். நாட்டில் நிதி ஸ்திரத்தன்மையை உருவாக்குவதற்கான பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டுள்ளோம். கடந்த செப்டெம்பர் மாதத்தில் சர்வதேச நாணய நிதியத்துடனான நிறைவேற்றுக்குழு மட்டத்திலான ஒப்பந்தம் ஒன்றை ஏற்படுத்திக்கொண்டோம். அதனை நடைமுறைப்படுத்துவதற்கு 2023 இற்கான வரவு செலவுத் திட்ட அறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்திருந்தோம்.

அந்த நேரத்தில் வரிகளை அதிகரிக்க வேண்டிய நிலைமை உருவானது. அப்போதும் எதிர்க்கட்சிகளை எம்மோடு ஒன்றுபட்டு பயணிக்க முன்வருமாறு அழைப்பு விடுத்த போது அவர்கள் "அரசாங்கம் பொய் சொல்கிறது. கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தங்கள் எவையும் இல்லை. இந்த பணத்தை பெற்றுக்கொண்டு மோசடி செய்யப் போகிறார்கள்" என்று பல குற்றச்சாட்டுக்களை முன்வைத்தது. இருப்பினும் அதன் பின்னரான ஜனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களில் நாம் முன்னெடுக்கவிருந்த வேலைத்திட்டங்களுக்கு ஆர்ப்பாட்டங்கள் வாயிலாக தடையேற்படுத்த முயற்சித்த போதிலும் நாம் அச்சமின்றி முன்னோக்கிச் சென்றோம்.

இறுதியாக ஏப்ரல் மாதத்தில் சர்வதேச நாணய நிதியத்தின் நிதிக்குழு ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்டது. அதற்கான முதன்மை நியதியாக பெரிஸ் சமவாயம் , இந்தியா மற்றும் சீனாவுடன் கடன் மறுசீரமைப்பு முயற்சிகளை ஆரம்பிக்க வேண்டுமென அறிவிக்கப்பட்டது. அப்போது சீனா அதனை ஏற்றுக்கொள்ளாது என எதிர்க்கட்சி கூறியது. ஆனால் மார்ச் மாதத்தில் சீனாவும் தனது இணக்கப்பாட்டை தெரிவித்தது.

பின்னர் இந்த ஒப்பந்தத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதாக உறுதியளித்தோம். அதனை நிறைவேற்றிக்கொள்ள அனைவரையும் ஒத்துழைக்குமாறு கோரினோம். இறுதியாக பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சியும் அதனை ஆதரிக்க வேண்டிய நிலைமை வந்தது. அதன் பின்னர் கடன் வழங்குநர்களுடன் ஆலோசிப்பதற்காக மேற்படி ஒப்பந்தத்தை நான் அதிகாரிகளிடத்தில் சமர்ப்பித்தேன்.

அந்த நேரத்தில் எமது மொத்தக்கடன் 83 பில்லியன் டொலர்களாகியுள்ளது என்பதை மத்திய வங்கி ஆளுநர் கூறியிருந்தார். அது எமது மொத்த தேசிய உற்பத்திக்கு நிகரானதாகும். இன்னும் 10 - 15 வருடங்கள் சென்றாலும் அந்த கடனை நிவர்த்திக்கும் இயலுமை எம்மிடம் இல்லை. அதனால் வெளிநாட்டு கடன் வழங்குநர்களிடத்தில் எமக்கு 17 டொலர் பில்லியன் கடன் நிவாரணம் அவசியப்படுகிறது என்பதை நாம் தெரியப்படுத்தினோம். அந்த நிவாரணத்தை பெற்றுத்தர முடியாவிடின் மீள் செலுத்துகை காலத்தை நீடித்தல், வட்டியை குறைத்தல் ஆகிய விடயங்களில் ஏதேனும் ஒன்றை செய்யுங்கள் என கோரியிருந்தோம்.

அப்போது வெளிநாட்டு கடன்களுக்கு நிவாரணம் வழங்க முடியும் என்றாலும் உள்நாட்டு கடன் தொடர்பில் அவதானம் செலுத்த வேண்டியதன் அவசியத்தையும் சுட்டிக்காட்டினர். உள்நாட்டு கடனை குறைக்காவிட்டாலும் வெளிநாட்டுக் கடனை மீளச் செலுத்த பணம் இருக்கவில்லை. உள்நாட்டு பணத்தின் ஊடாகவே நாம் டொலர்களை கொள்வனவு செய்ய வேண்டியிருந்த காரணத்தினால் உள்நாட்டு கடனையும் குறைக்க வேண்டுமென வலியுறுத்தினர்.

அதன் பின்னர் இந்நாட்டின் வங்கிகள் மற்றும் ஊழியர் சேமலாப நிதியம் ஆகியவற்றின் மீது கைவைக்காமல் மேற்படி நகர்வை முன்னெடுக்குமாறு எனது ஆலோசகருக்கும் மத்திய வங்கி ஆளுநருக்கும் அறிவுறுத்தினேன். அதன் பலனாகவே மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டது. அது அரசியல் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம் அல்ல. மாறாக அரச நிதிக்குழுவுக்கு அதிகாரிகளை அழைத்து கோரிய விடயமாகும். அதிகாரிகளும் அந்த யோசனைக்கு இணக்கம் தெரிவித்தனர். இருப்பினும் அந்த ஆரதவு பாராளுமன்றத்தில் கிடைக்கவில்லை. 62 பாராளுமன்ற உறுப்பினர்கள் யோசனைக்கு எதிராக வாக்களித்தனர். முதலாவதாக ஊழியர் சேமலாப நிதியத்தின் மீது கைவைக்க வேண்டாம் என்கிறார்கள். நாம் அதன் மீது கைவைக்கவில்லை. மேலும் நான் ஜனாதிபதியாவதற்கு முன்பாகவே அதற்கான வட்டி வீதம் 10%-9% ஆக குறைவடைந்திருந்தது. நாட்டில் காணப்பட்ட நிலைமையில் 10% சதவீத வட்டியை கூட பெற்றுக்கொடுக்க முடியாத நிலையே காணப்பட்டது. எதிர்க்கட்சிகள் அன்று மேற்படி விடயங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்திருக்கவில்லை.

அதேபோல் குறைந்தபட்சம் 9% சதவீத வட்டி வழங்கப்பட வேண்டும் என்பதை அமைச்சரவையே தீர்மானித்திருந்தது. நல்லதொரு மேம்பாடு வருகின்ற போது 10% சதவீத வட்டியை நாம் அறிவிப்போம். ஊழியர் சேமலாபத்தில் நாம் கைவைக்கவில்லை என்பதோடு 9% வட்டி என்பது சட்டத்தின் ஊடாகவே உறுதிப்பட்டுள்ளது.

அடுத்தாக 24% சதவீத வட்டி அறவிடப்படுவதாக குற்றஞ்சாட்டப்படுகின்றது. ஆனால் அந்த வட்டி எதிர்வரும் நாட்களில் குறைவடையும். பணவீக்கம் 9% இற்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ள போதும் வட்டி வீதம் 12% - 13% ஆகவே காணப்பட்டது. இந்த நேரத்தில் வரி விதிக்க வேண்டிய விதம் பற்றி எதிர்க்கட்சி கூறுமெனில் அதுபற்றி அமைச்சரவையில் ஆலோசிக்க நாம் தயாராகவே உள்ளோம்.

மூன்றாவதாக வங்கிகளுக்கு வரி அதிகரிக்கப்படவில்லை என்றும் கூறுகின்றனர். இருப்பினும் எம்மால் வங்கிகளிடத்தில் அதிகளவில் வரியை அறவிட முடியும். ஆனால் அப்போதைய வட்டி வீதம் 12% காணப்பட்டாலும் 13%- 14% வரையான வட்டியை அறவிட வேண்டிய நிலைமைக்கு வங்கிகள் தள்ளப்படும். அவ்வாறு வட்டியை அதிகரிக்க இடமளிக்க முடியாது என்பதால் மேற்படி மூன்று யோசனைகளையும் நான் நிராகரித்துவிட்டேன்.

எனவே தொடர்ச்சியாக போலியான பிரசாரங்களை முன்னெடுப்பதற்கு மாறாக அரசாங்கத்தினால் நாட்டின் அபிவிருத்திக்காக முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்களுடன் இணைந்துக்கொள்ளுமாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையிலான முழு எதிர்க்கட்சிக்கும் அழைப்பு விடுக்கிறேன். அவ்வாறு ஒன்றுபடும் பட்சத்தில் நாட்டை முன்னேற்றும் வேலைத்திட்டத்துக்கு பங்களிப்புச் செய்த பெருமிதத்துடன் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்குவதற்கான வாய்ப்பு அவர்களுக்குக் கிட்டும். ஆளும் தரப்பில் இருந்தாலும் எதிர்த் தரப்பில் இருந்தாலும் நாட்டின் அபிவிருத்திக்காகவும் நாட்டு மக்களுக்குச் சலுகைகளை பெற்றுக்கொடுப்பதற்காகவும் ஒன்றுபட்டுச் செயற்படுவோம். அதனை விடுத்து போலியான தர்க்கங்களை முன்வைப்பதால் பயனில்லை. அந்த முயற்சியில் எதிர்க்கட்சி பல தடவைகள் தோற்றுப்போயுள்ளது.

சபாநாயகருடன் கலந்துரையாடி எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு மேலும் பல பொறுப்புகளை கையளிக்க நான் தயாராகவே உள்ளேன். தற்போதும் அவர்கள் செயற்குழுக்களில் அங்கத்துவம் வகிக்கின்றனர். எதிர்வரும் நாட்களில் வரவு செலவுத்திட்ட அலுவலகம் திறக்கப்படவுள்ளதால் மேலும் பல பொறுப்புகள் உருவாகும். அதனால் அரசாங்கத்துக்கு ஒத்துழைப்பு வழங்க முன்வாருங்கள் எதிர்க்கட்சி அந்தஸ்துக்கு பாதிப்பு ஏற்பட நாம் இடமளியோம்" என ஜனாதிபதி உறுதியளித்தார்.

## சமையல் எரிவாயு...

12.5 கிலோ கிராம் எடை கொண்ட சமையல் எரிவாயு சிலிண்டரின் விலை 3,000 ரூபாவுக்குள் வரையறுக்கப்படும் வகையில் குறைக்கப்படும் என லிட்ரோ நிறுவனத்தின் தலைவர் மேலும் தெரிவித்துள்ளார். எரிவாயு சிலிண்டர் விலை குறைப்பு தொடர்பான உத்தியோகபூர்வ அறிவிப்பு இன்று வெளியிடப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

மாதாந்த எரிவாயு விலை சூத்திரத்துக்கு அமைய இந்த வருடத்தில் நிறைவடைந்த ஆறு மாத காலத்தில் மாத்திரம் எரிவாயு சிலிண்டரின் விலை நான்கு தடவைகள் குறைக்கப்பட்டன.

உலக சந்தையில் எரிவாயு விலையின் வீழ்ச்சி,டொலரின் பெறுமதி வீழ்ச்சி மற்றும் தேசிய மட்டத்தில் ரூபாவின் பெறுமதி உயர்வு ஆகிய காரணிகளை அடிப்படையாகக் கொண்டு எரிவாயு விலை குறைக்கப்பட்டது.

ஜூலை மாதம் எரிவாயு விலை சூத்திரத்துக்கு அமைய 12.5 கிலோகிராம் நிறையுடைய சிலிண்டரின் விலையை அதிகபட்ச தொகையால் குறைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. அத்துடன் 5 கிலோ கிராம் மற்றும் 2.3 கிலோ கிராம் நிறையுடைய சிலிண்டர்களின் விலையும் குறைக்கப்படும் என்றார்.

எரிவாயு விலை சூத்திரத்துக்கு அமைய கடந்த மாதம் 12.5 கிலோகிராம் சிலிண்டரின் விலை 452 ரூபாவினாலும் 5 கிலோகிராம் சிலிண்டரின் விலை 181 ரூபாவினாலும், 2.3 கிலோகிராம் சிலிண்டரின் விலை 83 ரூபாவினாலும் குறைக்கப்பட்டது.

## ஜூன் மாதத்தில்...

அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் பிரியந்த பெர்னாண்டோ கூறியுள்ளார்.

கடந்த வருடம் முழுவதும் 7 இலட்சத்து 20 ஆயிரத்துக்கும் குறைந்த எண்ணிக்கையிலான சுற்றுலாப் பயணிகளே நாட்டுக்கு வருகை தந்துள்ளனர்.

## ஆயுர்வேத திருத்தச் ...

அவசர அவசரமாகக் கொண்டு வரப்படும் சட்டங்களால் பயனில்லை.சுதேச மற்றும் பாரம்பரிய மருத்துவத் துறைகள் இரண்டும் பாதுகாக்கப்பட வேண்டும்.புதிய ஆயுர்வேத திருத்தச் சட்டத்தின் ஊடாக இந்நாட்டின் பாரம்பரிய மருத்துவத்துறையை முற்றாக அழிக்க தற்போதைய அரசாங்கம் தயாராகி வருவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

ஆயுர்வேதம் மற்றும் சுதேச மருத்துவம் தொடர்பாக நிலவும் பல்வேறு விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக நேற்று (03) காலை கொழும்பில் உள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் ஆயுர்வேத,சுதேச வைத்தியர்கள் பிரதிநிதிகள் குழுவினரைச் சந்தித்தபோதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது,

ஆயுர்வேத மருத்துவத் துறைக்கு சட்டக் கட்டமைப்பொன்று தேவை என்பதை நானும் ஏற்றுக்கொள்கிறேன்.ஆயுர்வேத மருத்துவம் மற்றும் பாரம்பரிய மருத்துவ துணைத் துறைகள் இரண்டுக்கும் பொருந்தக்கூடிய வகையில் சட்ட கட்டமைப்பைத் தயாரிக்க வேண்டும் .அவசர அவசரமாக இவ்வாறான சட்டமூலங்களை கொண்டு வருவதற்கு பதிலாக சுகாதார அமைச்சர்,சுதேச மருத்துவத்துறை அமைச்சர் உள்ளிட்ட தரப்பினர் இது தொடர்பில் முறையான கலந்துரையாடலை நடத்தி நிலைமையை சரியாக புரிந்துகொள்வதையே செய்ய வேண்டும்.தற்போது முன்வைக்கப்படவுள்ள சட்டமூலத்தை குறித்த தரப்புகள் உடனடியாக ஆராய்ந்து தெளிவான நிலைப்பாட்டை எட்ட வேண்டும் என்றார்.

## மரக்கறிகளின்...

ஆபத்துள்ளதாக இப்பகுதி விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

மேலும், குறித்த நிலை தொடர்ந்து நீடிப்பதன் காரணமாக தற்போது சந்தையில் மரக்கறிகளின் விலை குறிப்பிட்டளவு உயர்ந்துள்ளது. தொடர்ந்தும் மழையுடன் கூடிய காலநிலை அதிகரிக்குமாயின் மேலும் விலை அதிகரிக்கும் அபாயம் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்காலப்பகுதியில் மரக்கறி வகைகளின் விலை வீழ்ச்சி காணப்பட்டிருக்கும். ஆனால் இந்த வருடத்தில் இவ்வாறு மரக்கறி வகைகள் விலை அதிகரிப்பால் மக்கள் பெரிதும் கவலையடைந்துள்ளனர். மலையகத்தில் இவ்வாறான காலநிலையால் மரக்கறி வகைகளின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளதாக வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

அந்தவகையில்,லீக்ஸ் ஒரு கிலோ விலை – 200 ரூபா,

பாகற்காய் ஒரு கிலோ விலை – 200 ரூபா

வெண்டிக்காய் ஒரு கிலோ விலை – 190 ரூபா

புடலங்காய் ஒரு கிலோ விலை – 180 ரூபா

தக்காளி ஒரு கிலோ விலை – 360 ரூபா

கோவா ஒரு கிலோ விலை – 320 ரூபா

கறிமிளகாய் ஒரு கிலோ விலை – 480 ரூபா

கத்தரிக்காய் ஒரு கிலோ விலை – 250 ரூபா

நுவரெலியா உருளைக் கிழங்கு ஒரு கிலோ விலை – 290 ரூபா

போஞ்சி ஒரு கிலோ விலை – 600 ரூபா

பச்சைமிளகாய் ஒரு கிலோ விலை – 500 ரூபா

கரட் ஒரு கிலோ விலை – 440 ரூபாவிலிருந்து 480 ரூபா வரை விற்கப்படுவதாகவும் வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

## சீனித் தொழிற்சாலை...

வவுனியாவில் அமைந்துள்ள அவரது அலுவலகத்தில் நேற்று (03) இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போது வவுனியாவில் சீனித்தொழிற்சாலை அமைக்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளமை தொடர்பில் ஊடகவியலாளர் ஒருவர் கேள்வி எழுப்பியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

சீனித்தொழிற்சாலை தொடர்பில் 4 வது தடவையாக அமைச்சரவை அனுமதி கிடைத்திருக்கின்றது. ஆனாலும் நடைமுறைப்படுத்துவதற்கான வாய்ப்புகள் உருவாக்கப்படவில்லை. நிலம் ஒதுக்கப்பட்டுள்ளதாக சொல்லப்படுகிறது. முதலீட்டாளர்கள் இன்னும் தமது கருத்துக்களை சொல்லவில்லை. ஆனால் பலர் குத்திமுறிகிறார்கள். சிங்கள குடியேற்றம் வரும் எனவும் சீனா முதலீடு எனவும் கூறுகிறார்கள்.

எம்மைப் பொறுத்தவரை தமிழீழ விடுதலை இயக்கம் சீனாவின் முதலீட்டை அதாவது இந்தியாவுக்கு எதிரான முதலீட்டை ஏற்கமாட்டோம். இந்தியாவுக்கு எதிரான எந்தவொரு விடயங்களையும் நாங்கள் ஏற்றுக் கொள்ளப்போவதில்லை. சீனா முதலீட்டை எதிர்ப்போம். நாம் ஒரு போராட்ட இயக்கம். நிச்சயமாக சிங்கள குடியேற்றங்களையும் எதிர்ப்போம்.

சீனித் தொழிற்சாலை முறையாக நடைமுறைப்படுத்தப்படாத நிலையில் பல பேர் குத்தி முறிகிறார்கள். வவுனியா மக்களோ அல்லது வவுனியாவில் உள்ள அரசியல்வாதிகளோ இது தொடர்பில் கருத்து சொல்லவில்லை. வவுனியாவுக்கு வரும் முதலீடு என்ற அடிப்படையில் எங்களது மக்களின் கருத்துக்களையும் இங்குள்ள அரசியல்வாதிகள், பொது அமைப்புக்களின் தலைவர்கள் ஆகியோரது கருத்துக்களையும் பெற்ற பின் தான் இங்கு கொண்டு வருவதா இல்லையா என முடிவெடுப்போம்.ஆகவே, தயவு செய்து யாரும் குத்தி முறியவேண்டாம். சீனித் தொழிற்சாலையால் சிங்கள குடியேற்றம் வரும். சீனா வரும் என நிரூபிக்க முடிந்தால் நிரூபிக்கவும். அதனைவிடுத்து சும்மா குத்திமுறிவதால் அர்த்தமில்லை.

இந்த தொழிற்சாலை தாய்லாந்து நிறுவனத்தின் முதலீடு. இதில் தமிழீழ விடுதலை இயக்கம் எந்தப் பங்காளியும் இல்லை. இது தென்னிலங்கைக்கு செல்வதற்கான வாய்ப்பை தடுத்து நிறுத்தி வடக்குக்கு கொண்டு வருவதற்கான ஒரு முயற்சியே. இதற்கான பங்காளிகளாக நாம் இருக்கப் போவதில்லை.

முதலீட்டாளர்களைக் கொண்டு வருவதற்கான ஒரு செயற்பாடே ஒழிய பங்காளர் இல்லை. மக்களின் நலன், விவசாயிகளின் நலன் என்பன பற்றி கவனம் செலுத்தி வவுனியா மக்களோடு கலந்தாலோசித்து எமது கருத்தை சொல்ல இருகின்றோம். வவுனியா மக்கள் விரும்பவில்லை என்றால் சிங்கள இடத்துக்கு போகட்டும். மக்கள் அபிப்பிராயம் பெற்று தான் நாம் முடிவெடுப்போம்.

எங்களைப் பொறுத்தவரை எமது தேசத்தில் முதலீடுகள் நடைபெற வேண்டும். ஆகவே இதில் முதலீட்டை பார்ப்பதை விட்டுவிட்டு கனவுகளோடு பார்க்க வேண்டாம். ஆதாரம் இல்லாத கருத்துக்களை கூற வேண்டாம்.

வவுனியா மக்கள் ஆதரவு தந்தால் கொண்டு வர முயற்சி செய்வோம். அவர்கள் வேண்டாம் என்றாம் திருப்பி அனுப்புவோம். தமிழீழ விடுதலை இயக்கம் முதலீட்டைக் கொண்டு வர முயற்சிக்கின்றது என்பதற்காக சிலர் இதை எதிர்க்கிறார்கள். இது எங்களது ஒரு முயற்சி அவ்வளவு தான். இதை பற்றி யாரும் குத்தி முறிய வேண்டாம். நாமும் குத்தி முறியப்போவதில்லை எனத் தெரிவித்தார்.

## விசேட வைத்தியர்கள்..

சுகாதார அமைச்சினால் கடந்த வாரம் பரிந்துரைக்கப்பட்டிருந்தது.

இந்த தீர்மானம் குறித்து கடந்த வாரம் மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு அறிவிக்கப்பட்டதாக சுகாதார அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டுள்ளார்.

60 வயதில் ஓய்வு பெறுவதற்கு எதிராக விசேட வைத்திய நிபுணர் குழுவினால் தாக்கல் செய்யப்பட்ட மனு தொடர்பில் இந்த விடயங்கள் முன்வைக்கப்பட்டதாக சுகாதார அமைச்சின் செயலாளர் ஜனக ஸ்ரீ சந்திரகுப்த குறிப்பிட்டுள்ளார்.

## கடும் காற்றுடன்..

கினிகத்தேன, டிக்கோயா, நோர்வூட், பொகவந்தலாவை, மஸ்கெலியா மற்றும் நோட்டன் போன்ற பிரதேசங்களில் கடந்த சில நாட்களாக பெய்து வரும் மழை காரணமாக சில இடங்களில் மண்சரிவுகள் ஏற்பட்டுள்ளதுடன் பிரதான வீதிகளில் போக்குவரத்து பாதிப்புகளும் ஏற்பட்டுள்ளன.

நுவரெலியா பிரதேச செயலகத்துக்குட்பட்ட கொட்டகலை, தலவாக்கலை, அக்கரப்பத்தனை, டயகம,போடேஸ், நானு ஓயா,நுவரெலியா,கந்தப்பளை ஆகிய பிரதேசங்களில் நேற்றுமுன்தினம் ஞாயிறு (02) இரவு முதல் கடும் காற்றுடன் தொடர்ச்சியாக கடும் மழை பெய்து மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு பாதிப்புகள் ஏற்பட்டன.

அதேநேரத்தில் அக்கரப்பத்தனை பிரதேச சபைக்குட்பட்ட டயகம,அக்கரப்பத்தனை,நாகசேனை ஆகிய பகுதிகளில் தொடர்ச்சியாக மழை பெய்து வருவதுடன் ஆறுகள்,கால்வாய்கள் பெருக்கெடுத்து விவசாய காணிகளுக்குள் வெள்ள நீர் ஊடுறுவி பயிர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

அத்துடன் நானு ஓயா பிரதேசத்தில் நுவரெலியா -தலவாக்கலை ஏ 07 பிரதான வீதியின் கிளரண்டன் பகுதி வீதியில் மண்சரிவு ஏற்பட்டதால் மண்மேடை முற்றாக அகற்றும் வரை ஒரு வழி போக்குவரத்துக்கு வீதி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

தலவாக்கலை,லிந்துலை,அக்கரப்பத்தனை ஆகிய பிரதேசங்களில் பெய்து வரும் கடும் மழை காரணமாக தலவாக்கலை மேல் கொத்மலை நீர்த்தேக்கத்துக்கு நீரேந்தி வரும் ஆக்ர ஓயா ஆறு பெருக்கமெடுத்துள்ளது.

இதன்காரணமாக மேல் கொத்மலை நீர்த்தேக்கம் நிரம்பிய நிலையில் அங்கு நீர்த்தேக்கத்தின் ஒரு வான் கதவு திறந்து விடப்பட்டுள்ளது.

நுவரெலியாவில் பெய்து வரும் தொடர்ச்சியான மழை காரணமாக கந்தப்பளை,நுவரெலியா,டொப்பாஸ்,சாந்திபுர,பம்பரகலை,பொரலாந்த பகுதிகளில் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளதுடன் விவசாய நடவடிக்கைகளுக்கு பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன.

இந்த நிலையில் தேயிலைத் தோட்டங்களுக்கு நாளாந்த தொழிலுக்காகச் சென்ற தொழிலாளர்களும் அரை நாள் வேலை செய்து விட்டு வீடு திரும்பியுள்ளனர்.

மேலும் கந்தப்பளை பிரதேசத்தில் கடும் காற்றுடன் அடைமழை பெய்து வருகின்றது.இதனால் தேயிலை மலைகளில் பணிக்கு சென்ற தொழிலாளர்களுக்கு பாரிய மரங்கள்,காட்டுப்பகுதிக்கு அருகில் பணிக்கு செல்வதை தவிர்க்குமாறும் எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

கொத்மலை பிரதேசத்தில் பெய்து வரும் தொடர்ச்சியான மழை காரணமாக நீர்த்தேக்கங்கள் பல நிரம்பியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இறம்பொடை நீர்வீழ்ச்சியில் தண்ணீர் ஓட்டம் வழமைக்கு மாறாக காணப்படுவதால் சுற்றுலாப் பயணிகளாக நுவரெலியாவுக்கு வருபவர்கள்,வந்து திரும்புவோர் குளிக்கவோ அருகில் சென்று பார்வையிடவோ வேண்டாம் என கொத்மலை பொலிஸாரால் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அதேநேரத்தில் தவலந்தன்னை தொடக்கம் நுவரெலியா வரையும் நுவரெலியா தொடக்கம் நானு ஓயா வரையும் நுவரெலியா தொடக்கம் இராகலை வரையும் இராகலை தொடக்கம் வலப்பனை வரையும் புகைமூட்டம் அவ்வப்போது அதிகரிப்பதால் வாகன சாரதிகள் அவதானத்துடன் தமது வாகனங்களை செலுத்துமாறு போக்குவரத்து பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

அதேபோல் தலவாக்கலை தொடக்கம் பூண்டுலோயா வரையான பிரதான வீதியில் கவனமாக வாகனங்களை செலுத்த சாரதிகளுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் கொட்டகலை தொடக்கம் தலவாக்கலை வரை பிரதான வீதியில் வாகனம் ஒன்றிலிருந்து எண்ணெய் கசிவு ஏற்பட்டுள்ளதால் வீதி வழுக்கள் தன்மை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கும் பொலிஸார் அவதானமாக வாகனங்களை செலுத்த எச்சரித்துள்ளனர்.

நுவரெலியாவில் இடைவிடாது தொடர்ச்சியாக பெய்து வரும் மழைகாலம் ஆற்று ஓரங்கள்,பாரிய மண்மேடுகள்,பாரிய மரங்கள் காணப்படும் இடங்களில் வீடுகள் அமைத்து வாழ்வோர் அவதானமாக அல்லது இடம் பெயர்ந்து வசிக்குமாறு நுவரெலியா இடர் முகாமைத்துவ திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

## சில இடங்களுக்கு...

அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, மேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் கண்டி, நுவரெலியா, காலி மற்றும் மாத்தறை ஆகிய மாவட்டங்களிலும் சில இடங்களில் 150 மில்லிமீற்றருக்கும் அதிகமான பலத்த மழை பெய்யக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## செவ்வாய் கிரகத்தில்...

பாறை அமைப்புகளுக்கும் இடையிலான ஒற்றுமைகள் குறித்து ஆராய்வதற்காக தற்போது இலங்கைக்கு வந்துள்ளது.

இலங்கையில் நாசா விஞ்ஞானிகள் தமது ஆய்வுப் பயணத்தை முதலில் கினிகல்பலஸ்ஸ மற்றும் இந்திகொலபெலஸ்ஸ ஆகிய பிரதேசங்களில் முன்னெடுக்க தீர்மானித்துள்ளனர்.

அதனைத் தொடர்ந்து தென் மாகாணத்தில் உள்ள உஸ்ஸங்கொட பிரதேசத்துக்கு பயணிக்கவுள்ளனர்.

குறித்த பிரதேசங்கள் அவற்றின் தனித்துவமான புவியியல் அம்சங்களுக்காக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன என்பதோடு, அவை ஆய்வுக் குழுவின் ஆர்வத்தைத் தூண்டியுள்ளன.

புவியியல் மற்றும் வானியல் துறைகளை இணைக்கும் இந்த ஆய்வானது, பூமிக்குரிய பாறைகள் மற்றும் தொலைதூர செவ்வாய் கிரகத்தில் உள்ள பாறைகளுக்கு இடையே உள்ள ஒற்றுமைகளை வெளிப்படுத்தும் என தெரிவிக்கப்படுகிறது.



வரலாற்று சிறப்புமிக்க நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய வருடாந்த தீர்த்தத் திருவிழா நேற்று (03) இடம்பெற்றது. விசேட பூஜை வழிபாடுகளைத் தொடர்ந்து , நாகபூசணி அம்மனின் , பிள்ளையார் மற்றும் முருகன் சகிதம் கங்காதரணியில் தீர்த்தமாடினார்.

# கங்காராமை விகாரையில் இந்தியாவின் பௌத்த மரபை பிரதிபலிக்கும் கண்காட்சி



எசல போயா தினத்தை முன்னிட்டு இந்திய உயர் ஸ்தானிகராலயத்தால் இந்தியாவின் உயர்வான பௌத்த மரபைக் குறிக்கும் விசேட கண்காட்சியொன்று கொழும்பு கங்காராமை விகாரையில் நேற்று (03) ஒழுங்கமைக்கப்பட்டது.

அறிவு, வழிகாட்டல் மற்றும் ஞானம் ஆகியவற்றைத் தரும் ஆன்மீக நெறியாளர்கள் அல்லது குருமாரைக் கௌரவிக்கும் முகமாக இந்தியாவில் கொண்டாடப்படும் குரு பூர்ணிமா பண்டிகைக்கு சமாந்தரமாக எசல போயா தினம் அனுஷ்டிக்கப்படுகின்றது. இப்போயா தினத்திலேயே இந்தியாவின் சர்நாத்தில் புத்தபெருமான் தனது முதலாவது பிரசங்கத்தை நடத்தியிருந்தாரென்பது குறிப்பிடத்தக்கது.

புத்தபெருமானின் வாழ்வின் முக்கிய அம்சங்களையும் இந்தியாவிலுள்ள முக்கிய பௌத்த தலங்களையும் காண்பிக்கும் புகைப்படங்கள் இங்கு காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. அத்துடன் நூற்றாண்டுகளுக்கும் அதிக காலம் பழைமை வாய்ந்த சிற்பங்களின் புகைப்படங்களும் இக்கண்காட்சியில் வைக்கப்பட்டிருந்தன. சங்கைக்குரிய கலாநிதி கிரிந்தே அசாஜி தேரர் மற்றும் இந்திய உயர் ஸ்தானிகர் கோபால் பாக்லே ஆகியோர் இந்த கண்காட்சியை பார்வையிட்டனர்.

இந்தியாவின் பௌத்த மரபைப் பிரதிபலிக்கும் இவ்வாறான பல கண்காட்சிகள் உயர் ஸ்தானிகராலயத்தால் ஒழுங்கமைக்கப்பட்டுவருவதுடன் அண்மையில் வெசாக் மற்றும் பொசன் போயா தினங்களின்போதும் முறையே சீமாமாலகய மற்றும் ஹோமாகம பொசன் வலயங்களில் கண்காட்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## சங்கானையில் கணித கல்விக்கண்காட்சி



சங்கானை மற்ஸ் கல்வி நிலையத்தில் நேற்று கணித கல்விக்கண்காட்சி இடம்பெற்றது.

கல்வி நிலையத்தின் பணிப்பாளர் இ.பிரதீப் தலைமையில் நேற்று காலை 9.00 மணியளவில் ஆரம்பமான கண்காட்சி நண்பகல் வரை இடம்பெற்றது. ஆரம்பத்தில் விருந்தினர்கள் வரவேற்று அழைத்துவரப்பட்டனர். தொடர்ந்து மங்கல விளக்கேற்றல் இடம்பெற்றதுடன் விருந்தினர்கள் நாடா வெட்டி கண்காட்சியை ஆரம்பித்து வைத்தனர்.

இக் கண்காட்சியில் தரம் 6 தொடக்கம் 11 வரையான மாணவர்களின் ஆக்கங்கள் காட்சிப்படுத்தப்பட்டதோடு அவற்றுக்கான விளக்கங்களும் மாணவர்களால் பார்வையாளர்களுக்கு வழங்கப்பட்டன.

இக்கண்காட்சியில் மாணவர்கள், பெற்றோர் மற்றும் நலன்விரும்பிகள் என பலர் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.

தனியார் கல்வி நிலையங்களில் பெரும்பாலும் இவ்வாறான இணை பாடவிதான செயற்பாடுகள் மிக குறைவாக இடம்பெறுகின்ற நிலையில் மாணவர்களின் இச்செயற்பாடு பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

## தமிழாராய்ச்சி மாநாட்டுக்கு நூலகர் மகேஸ்வரன் பயணம்

இக்பால் அலி



பதினோராவது உலக தமிழாராய்ச்சி மாநாடு ஏற்பாட்டு குழுவினர் இம்முறை இரண்டாக பிரிந்து ஒரு சாரார் உலக தமிழ் ஆராய்ச்சி மாநாட்டை சென்னையிலிலும் மற்றைய பிரிவினர் மலேசியாவிலும் நடத்த திட்டமிட்டுள்ளனர்.

11ஆம் திகதி உலகத் தமிழாராய்ச்சி மாநாடு அலேசியாவிலும் சென்னை மாநாடு ஜூலை மாதம் 7ஆம் திகதி முதல் 9 ஆம் திகதி வரை சென்னை ஆசியாவியல் நிறுவன வளாகத்தில் நடைபெறவுள்ளது.

இம்மாநாட்டில் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பிரதம நூலகர் ஆர். மகேஸ்வரன் , "தற்கால தமிழ் இலக்கியத்தில் அறிவியல் தமிழ், கணனித் தமிழ் வளர்ச்சியில் இலங்கைப் பல்கலைக்கழக நூலகங்களின் வகிபாகம்" எனும் தலைப்பில் தமது ஆய்வுக்கட்டுரையை சமர்ப்பிக்கவுள்ளார். இதற்காக இந்தியா பயணமாகிறார். இது இவர் ஆய்வாளராக பங்கு கொள்ளும் மூன்றாவது உலக தமிழாராய்ச்சி மாநாடாகும்.

## இடை நிறுத்தப்பட்டுள்ள கொடுப்பனவை மீள பெற்றுக்கொடுக்குமாறு கோரி ஆசிரியர் முறைப்பாடு

### சம்பள நிலுவையை வழங்கியது வலயக்கல்வி அலுவலகம்

முல்லைத்தீவு வலயக் கல்வி அலுவலகத்தால் தனது இரு மாத கால சம்பளம் இடை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய அலுவலகத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டை அடுத்து குறித்த ஆசிரியருக்கான சம்பள நிலுவை வழங்கப்பட்டுள்ளது.

குறித்த விடயம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளரிடம் இருந்து சம்பளத்தை பெற்றுத் தருமாறு கடந்த வாரம் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய அலுவலகத்தில் ஆசிரியர் ஒருவர் முறைப்பாடு செய்திருந்தார்.

அவரது முறைப்பாட்டில், மாகாணக் கல்விப்பணிப்பாளரின் கடிதத்துக்கு அமைவாக முல்லைத்தீவு, விசுவமடு மகா வித்தியாலயத்தை நிரந்தரப் பாடசாலையாகவும் யாழ்ப்பாணம் மகாஜனக் கல்லூரியை தர்காலிக பாடசாலையாகவும் கொண்டு நான் ஏப்ரல் மாதம் 28ஆம் திகதி முதல் யாழ். மகாஜனக் கல்லூரியில் பணிபுரிந்து வருகின்றேன்.

எனக்கு முல்லைத்தீவு வலயக்கல்விப் பணிப்பாளரால் வைகாசி மற்றும் ஆனி மாத கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை.இப்பொருளாதார கஷ்டமான நிலைமையில் வலயக்கல்விப் பணிப்பாளரின் மேற்குறித்த செயற்பாடானது எனக்கெதிரான திட்டமிட்ட பழிவாங்குதலாகவே கருதுகின்றேன்.

கடந்த 2022ஆம் ஆண்டு 22ஆம் நான் ஐப்பசி மாதம் அளவில் சிறப்பிக்கப்பட்ட முன்னாள் அதிபரின் மணிவிழா தொடர்பாக எமது பாடசாலையின் பழைய மாணவர் சங்கம் முறைகேடாக விதத்தில் நிதி திரட்டி விடயம் ஊடகங்களில் வெளிவந்தன.

குறித்த முறைகேடு தொடர்பில் தகவல் அறியும் சட்டமூலத்தின் ஊடாகக் கேள்விகளை தொடுத்திருந்த நிலையில் எனக்கு எதிரான செயற்பாடுகளை வலயக் கல்விப் பணிப்பாளர் மேற்கொண்டு வந்தார்.

ஆசிரியர்கள் நிதி சேகரிப்பில் ஈடுபடுவது தவறு எனவும் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் நான் தற்காலிக பணியிடமாற்றம் பெற்று யாழ்ப்பாணம் வந்த நிலையில் எனது இரு மாதக் கொடுப்பனவுகளை திட்டமிட்ட முறையில் இழுத்தடிப்பு செய்கிறார்.

ஆகவே எனது உழைப்புக்கான ஊதியத்தை வழங்காது நொண்டிச்சாட்டுகளை கூறிவரும் வலயக் கல்விப் பணிப்பாளரிடமிருந்து எனது சம்பளத்தை பெறுவதற்கு ஆவன செய்யுமாறு கோரி எழுத்து மூலம் முறைப்பாடு வழங்கி இருந்தார்.

இந்நிலையில் குறித்த முறைப்பாடு தொடர்பில் நடவடிக்கை எடுத்த மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய அலுவலகம் சம்பந்தப்பட்ட தரப்பினரை தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு விளக்கத்தை கேட்டது. குறித்த ஆசிரியரின் சம்பள நிலுவையை முல்லைத்தீவு வலயக்கல்வி அலுவலகம் முறைப்பாடு வழங்கி இரு நாட்களில் விடுவித்தது.



களுத்துறை மாவட்ட முஸ்லிம் லீக் இளைஞர் முன்னணியின் மாதாந்த கூட்டம் நேற்று (03) பெலேந்தையில் நடைபெற்றது.

## யாழ்ப்பாணம் - கொழும்பு விமான சேவை ஆரம்பம்

இரத்மலானையிலிருந்து - யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்துக்கான உள்நாட்டு விமான சேவை சனிக்கிழமை (01) ஆரம்பமாகியதாக இரத்மலானை விமான நிலையத்தின் முகாமையாளர் அருண ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இச்சேவையினூடாக கொழும்பிலிருந்து ஒரு மணி நேரம் பத்து நிமிடத்தில் யாழ்ப்பாணத்தை அடைய முடியும் எனவும் இந்த விமான சேவை வாரத்தில் சனி, ஞாயிறு, செவ்வாய் மற்றும் வியாழன் ஆகிய நான்கு நாட்கள் காலை வேளைகளில் இடம்பெறும் என்றும் அவர் கூறினார்.

12 பயணிகளை ஏற்றிச் செல்லக்கூடிய செஸ்னா 208 என்ற விமானமே இந்தப் பயணத்தில் இணைக்கப்பட்டுள்ளது. ஃபிட்ஸ் ஏவியேஷன் / டேவிட் பீரிஸ் ஏவியேஷன் ஆகிய நிறுவனங்கள் இந்த பயணிகள் போக்குவரத்துக்காக விமானங்களைப் பயன்படுத்தியுள்ளன.

ஒரு வழிக்கட்டணமாக 22 ஆயிரம் ரூபாவும் இருவழிக்கட்டணமாக 41,500 ரூபாவும் அறவிடப்படும். இதில் பயணிக்கும் பயணி ஒருவர் 7 கிலோகிராம் பொதியைக் கொண்டு செல்ல முடியும் எனவும் தெரிவித்தார்.

இதன்மூலம், யாழ்ப்பாணம் சென்று வருவதற்கும் வசதியாக இருக்கும் எனவும் இரத்மலானை விமான நிலையத்தின் முகாமையாளர் அருண ராஜபக்ஷ மேலும் தெரிவித்தார்.

## ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கைக்கான பணிப்பாளராக டகாஃபுமி கடொனோ நியமனம்



ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கைக்கான பணிப்பாளராக டகாஃபுமி கடொனோ நியமிக்கப்பட்டுள்ளார்.

இதுவரைகாலமும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கைக்கான பணிப்பாளராகப் பணியாற்றிய சென் செனின் பதவிக்காலம் கடந்த ஜூன் மாதம் 30 ஆம் திகதியுடன் முடிவுக்கு வந்துள்ளது.

இந்நிலையில் அப்பதவிக்குப் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள டகாஃபுமி கடொனோ, சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்கு அமைவாக இலங்கை அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் மறுசீரமைப்பு நடவடிக்கைகளுக்கு அவசியமான ஒத்துழைப்புக்களை ஆசிய அபிவிருத்தி வங்கி வழங்கும். அதேவேளை அந்த ஒத்துழைப்புக்கள் மூலம் இலங்கை மக்கள் பயனடைவது உறுதிப்படுத்தப்படும் என்று தெரிவித்துள்ளார்.

ஆசிய அபிவிருத்தி வங்கியில் கடந்த 2006 ஆம் ஆண்டு இணைந்துகொண்ட டகாஃபுமி கடொனோ, மேற்கு, தென்கிழக்காசிய மற்றும் மத்திய பிராந்தியங்களிலுள்ள ஆசிய அபிவிருத்தி வங்கியின் கிளை அலுவலகங்களில் பணியாற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.


## வெற்றி நிச்சயம்



**"உங்கள் பிரச்சினை எதுவானாலும் ஒருமுறை என்னைத் தொடர்புகொண்டால், 100% வெற்றி நிச்சயம்" நடக்காத காரியங்களையும் நடத்திவைக்கும் சக்தி என்னிடம் மட்டுமே உண்டு. என்னை நம்புங்கள். பணப்பிரச்சினை, தொழில் முடக்கம், வியாபார மந்தம், கடன் தொல்லை, முன்னேற்றத்தடை, நினைப்பது ஒன்று நடப்பது ஒன்றாக இருத்தல், எதிலும் தோல்வி, படிப்பில் மந்தம், எதிரித்தொல்லை, தீராதநோய், செய்வினை கோளாறு, போதைவஸ்துப்பாவனை, வழக்கில் வெற்றிபெற, போட்டி பந்தயங்களில் ஜெயிக்க, விற்கப்படாத வீடு/காணி/வாகனம் விற்க, வெளிநாடு செல்ல/விசா கிடைக்க, கொடுத்த பணம் திரும்பி வர, விவாகரத்தை தடுக்க, கணவன்-மனைவி பிரச்சினை, காதல் பிரச்சினை, பிரிந்தவர் ஒன்றுசேர, மனங்கவர்ந்தவரை வசமாக்கிக் கொள்ள, தகாத உறவை பிரிக்க, திருமணத்தடை, குழந்தையின்மை மற்றும் உங்கள் சகல பிரச்சினைகளுக்கும் 72 மணித்தியாலத்திற்குள் 100% நிரந்தரத் தீர்வு. இது நான் வணங்கும் அந்த ஆதிசிவன் மீது தேவ சத்தியம்.**

**உலகப்புகழ் பெற்றவரும் இலங்கையில் நம்பர் 1 மலையாள மாந்திரீக ஜாம்பவான், தத்துவஞானி, மகரிஷி, தேசபந்து, கௌரவ கலாநிதி. ஸ்ரீமத் சுவாமிஜி +94 710192687 (Whatsapp)www.facebook.com/Srimath Suwamiji/**


## தினசரி பலாபலன்கள்

**சோபகிருது வருடம் ஆனி மாதம் 18ஆம் நாள் திங்கட்கிழமை**

**மேஷம்** நண்பரிடம் கேட்ட உதவி தீடிரென கிடைக்கும். தொழில் முயற்சிகள் கைகூடும்.

**ரிஷபம்** வீண் மனப்பயத்தினால் உடல் நோய்கள் ஏற்படும். மறைமுக விரோதிகளின் தொல்லை.

**மிதுனம்** தொழில் விடயத்தில் கவனமாக இருக்காவிட்டால் வீண் பழி வரலாம். உடல் நோய்கள் கவனம்.

**கடகம்** விஷேட விருந்துபசாரத்தில் கலந்து கொள்வீர்கள். மனைவியால் அதிக நன்மைகளைப் பெறுவீர்கள்.

**சிம்மம்** புது நண்பர்கள் அறிமுகமாவார்கள். பகைவர்கள் விலகிச் செல்வார்கள்.

**கன்னி** பயணங்களில் இடையூறு ஏற்படும். உடல் நோய்களை அசட்டை செய்யாதீர்கள்.

**துலாம்** யாரையும் நம்பமுடியாமல் தவிப்பீர்கள். எதிர்கால வாழ்விற்கு திட்டமொன்றை தீட்டுவீர்கள்.

**விருச்சிகம்** இன்ப அனுபவங்களால் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். முயற்சிகளில் வெற்றி கிட்டும்.

**தனுசு** பணம், பொருள் விரையமாவதை எண்ணி கவலை அடைவீர்கள். நினைத்த காரியங்கள் சற்று தாமதமாகி நடக்கும்.

**மகரம்** மனதில் ஒருவித படபடப்புத் தன்மை இருக்கும். வீண் வம்புச் சண்டையினை விலை கொடுத்து வாங்காதீர்கள்.

**கும்பம்** வீண் பணவிரயமும் மருத்துவச் செலவுகளும் ஏற்படும். கோபத்தை குறைத்துக் கொள்வது நல்லது.

**மீனம்** தொழில், வியாபார லாபம், எதிர்ப்பார்திருந்த வெளிநாட்டு பயணம் அமையும்.

**திதி:** பிரதமை பி.ப.1.38 வரை பின் துவிதியை (தேய்)

**நட்சத்திரம்:** பூராடம் மு.ப. 8.25 வரை பின் உத்திராடம்

**யோகம்:** அமிர்தசித்த யோகம்

**வார சூலை:** வடக்கு திசை நோக்கி சுபகாரியம் கூடாது

**நல்லநேரம்:** மு.ப. 7.55– 8.55 மணி வரை

**ராகுகாலம்:** 2.55 – 4.25 மணி வரை

**எமகண்டம்:** 8.55–10.25 மணி வரை

**குளிகை:** 11.55– 1.25 மணி வரை

**சந்திராஷ்டமம்:** இடபம் - மிதுனம் ராசியினர் எச்சரிக்கையாக செயல்படவும்

**தன அதிஷ்டம்:** அஸ்வினி, மகம், மூலம் (பிறந்தவர்களுக்கு)

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**
**(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்)**
**ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.**
**தொலைபேசி : 077-0525325 078-6759739**

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 0114 846 097
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

2023, ஜூலை 04ஆம் திகதி, செவ்வாய்க்கிழமை

# முத்துராஜாவின் துயரம்!

யானை விவகாரத்தினால் தாய்லாந்துக்கும் இலங்கைக்கும் இடையே இராஜதந்திர முறுகல் நிலை ஏற்பட்டுள்ளது.

இரண்டு தசாப்தங்களுக்கு முன்னர் தாய்லாந்து இலங்கைக்கு அன்பளிப்பாக வழங்கிய இந்த யானை, தவறாக நடத்தப்பட்டதன் காரணமாக தற்போது மீண்டும் அந்நாட்டினால் திரும்பப் பெறப்பட்டுள்ளது. முத்துராஜா என்றழைக்கப்படும் 29 வயதுடைய 4000 கிலோ எடையுள்ள சாக் சூரின் என்ற தாய்லாந்து யானை கடந்த ஞாயிற்றுக்கிழமை (ஜூலை 2) மதியம் தாய்லாந்து சென்றடைந்தது. தாய்லாந்து அரச குடும்பம், 2001ஆம் ஆண்டு இலங்கை அரசாங்கத்திற்கு சாக் சூரின் யானையை பரிசாக வழங்கியது.

தாய்லாந்திடம் இருந்து பெறப்பட்ட யானை சாக் சூரின், இலங்கையில், ஒரு புத்த விகாரைக்கு பரிசாக வழங்கப்பட்டது. அங்கு அதற்கு புதிய பெயர் சூட்டப்பட்டது. முத்துராஜா என்று பெயரிடப்பட்ட அந்த யானை ஆன்மீக ஊர்வலங்களில் கௌரவிக்கப்பட்டது. இருப்பினும், விலங்கு உரிமைகள் மற்றும் சுற்றுச்சூழலுக்கான ஆர்வலர் குழு (RARE) யானை தவறாகப் பயன்படுத்தப்படுகிறது, சித்திரவதை செய்யப்படுகிறது மற்றும் புறக்கணிக்கப்படுகிறது என்று பல தடவைகள் குற்றஞ்சாட்டியது.

கடந்த ஆண்டு, இந்த யானை விவகாரத்தில் தலையிட வேண்டுமென தாய்லாந்து அதிகாரிகளிடம் RARE வேண்டுகோள் விடுத்தது. அந்த நேரத்தில் முத்துராஜா, கந்தே விகாரையில் இருந்தது. இந்த யானையை இலங்கை தேசிய விலங்கியல் பூங்காவிற்கு மாற்ற கடந்த நவம்பர் மாதம் கந்தே விகாரை தேவஸ்தானம் ஒப்புக்கொண்டது.

மரம் வெட்டும் குழுவினருடன் பணிபுரிய வேண்டிய கட்டாயத்தில் யானையின் காலில் பலத்த வெட்டுக் காயங்கள் ஏற்பட்டதாகவும், அதன் காயங்களுக்கு சிகிச்சை எதுவும் அளிக்கப்படவில்லை என்றும் குற்றச்சாட்டு எழுந்தது. மரம் வெட்டும் பணியில் ஈடுபட்டபோது யானைக்கு ஏற்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் காயங்கள் நீண்ட காலமாகப் புறக்கணிக்கப்பட்டதாகவும் RARE கூறியது. RARE அமைப்பின் நிறுவனர் பாஞ்சாலி பனாபிட்டிய, "யானை தாய்லாந்து திரும்பிச் சென்ற நிகழ்வு என்பது முடிவல்ல, முத்துராஜாவின் புதிய வாழ்க்கையின் ஆரம்பம்" என்று தெரிவித்திருப்பது இந்த விவகாரத்தின் ஆழத்தை உணர்த்துகிறது.

முத்துராஜா கடந்த ஆண்டு கந்தே விகாரையிலிருந்து மீட்கப்பட்டபோது வலி மற்றும் புண்களால் பாதிக்கப்பட்டிருந்தது. யானைக்கு ஏற்பட்ட புண் பெரும்பாலும் குணமாகியிருந்தாலும், முறையான வசதிகள் இல்லாததால், இறுதியாக அது தங்கவைக்கப்பட்டிருந்த தெஹிவளை மிருகக்காட்சிசாலையில் அதன் காலுக்கு முழுமையாக சிகிச்சையளிக்க முடியவில்லை என்றும், சரியாக நடக்க முடியாத நிலையில் இருந்தது என்றும் உள்ளக செய்திகள் கூறுகின்றன.

யானைகள் இலங்கையில் புனிதமானவையாகக் கருதப்படுவதுடன், சட்டத்தால் பாதுகாக்கப்படுகின்றன. எனவே, முத்துராஜா கோயிலை விட்டு வெளியேறியதற்கு அதிருப்தி தெரிவித்த RARE, யானையை அலட்சியப்படுத்தியவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சுட்டிக்காட்டுகின்றது.

முத்துராஜாவின் உடல்நிலை குறித்த பிரச்சினையை இலங்கை அரசாங்கத்திடம் எழுப்பத் தவறியதால் தாய்லாந்து அரசாங்கமும் தவறொன்றை இழைத்துள்ளது. இலங்கை வனவிலங்கு அதிகாரிகள் உரிய நேரத்தில் தலையீடு செய்யாததால் நாட்டிற்கு அபகீர்த்தி ஏற்பட்டுள்ளதாக இப்போது விமர்சனங்கள் எழுகின்றன.

முத்துராஜா கொழும்பிலிருந்து கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை 7:40 மணிக்கு சரக்கு விமானத்தில் தாய்லாந்துக்கு 700,000 டொலர்கள் செலவில் அழைத்துச் செல்லப்பட்டது. இதற்கான செலவை தாய்லாந்து அரசாங்கம் ஏற்றிருப்பதாக சொல்லப்படுகிறது.

முத்துராஜா என்பது திரும்பப் பெறப்பட்ட ஒரு பரிசு என்ற நிலையில், இந்த நடவடிக்கை நாடுகளுக்கு இடையிலான உறவுகளில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தும் என்பது விமர்சகர்களின் கருத்து. யானையின் நிலை குறித்து தாய்லாந்து மன்னரிடம் தனிப்பட்ட முறையில் இலங்கையின் வருத்தத்தை தெரிவித்ததாக பிரதமர் தினேஷ் குணவர்தன கடந்த மாதம் பாராளுமன்றத்தில் தெரிவித்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

புத்த விகாரைகளில் பயன்படுத்தப்படும் யானைகள் வருடத்திற்கு ஒருமுறை அவற்றின் நிகழ்வுகளுக்கு பயன்படுத்தப்படுகின்றன. அதன் பின்னர் அந்த யானைகளைப் பற்றி கவனிப்பாரில்லை. முத்துராஜா யானையும் அந்த வரிசையில் முதலிடத்தில் இருந்திருப்பது தெரிகிறது. மனித உரிமைகள் பற்றி உலகத்திற்கே வகுப்பெடுக்கும் இலங்கையால் சாதாரண வளர்ப்பு யானை ஒன்றையே பராமரிக்க முடியவில்லை என்ற கனதியான செய்தி முத்துராஜாவின் வெளியேற்றத்தால் பகிரங்கமாகியுள்ளது.

குரங்குகளை சீனாவுக்கு அனுப்புவதை எதிர்த்த விலங்கு ஆர்வலர்கள், முத்துராஜாவுக்கு ஏற்பட்ட துயரத்தை கண்டுகொள்ளவில்லை. அதற்காகக் குரல் கொடுக்கவுமில்லை. முத்துராஜா என்ற பெயர் சாடையாக தமிழ்ப்பெயர் போன்று இருப்பதால் இது தமிழ் யானை என்று நினைத்துவிட்டார்களோ என்னவோ?

# பயப்படுவதற்கு ஒன்றுமில்லை..! சீனா ஒரு காகிதப் புலிதான்!



சீனாவின் வலிமையை உலகம் மிரண்டு பார்க்கிறது என்றும் சீனாவின் ஆட்டத்தைக் கட்டுப்படுத்தவே இந்தியாவை அமெரிக்கா தன் பக்கம் இழுக்க முயல்கிறது என்றும் ஒரு பொதுவான கருத்து நிலவுகிறது. ஆனால், யதார்த்தம் அப்படியில்லை. சீனா நிஜப் புலி அல்ல. அது ஒரு காகிதப் புலி.

சீனாவைப் பற்றிய 5 விடயங்களை மனதில் கொள்ள வேண்டியது அவசியம். அந்த 5 கூறுகள் சீனாவை எந்த நேரம் வேண்டுமானாலும் சரிவில் தள்ளலாம்.

முதலாவது, சீனா அதன் உணவுத் தேவைக்கு வெளிநாடுகளையே நம்பியுள்ளது. இரண்டாவது, சீனாவில் போதிய எரிசக்தி இல்லை. சீனா அதற்கு தேவையான எரிசக்தியை வெளிநாடுகளிலிருந்தே இறக்குமதி செய்கிறது. மூன்றாவது, உற்பத்திக்குத் தேவையான போதிய மசகுப் பொருட்கள் சீனாவிடம் இல்லை. வெளிநாடுகளைத்தான் சார்ந்திருக்கிறது. நான்காவது, சீனா மிகப் பெரிய இராணுவக் கட்டமைப்பைக் கொண்டிருக்கலாம். ஆனால், அதன் உண்மையான பலம் இன்னும் பரிசோதிக்கப்படவில்லை. ஐந்தாவது, சீனாவுக்கு அடிப்படையறிவு இல்லை. ஏனைய நாடுகளுடன் நட்புறவு கொள்ளாமல், நிறைய எதிரிகளை சீனா கொண்டிருக்கிறது. அதன் நட்பு நாடுகள் என்று சொல்லப்படுபவை கூட பெரிய அளவில் பலன்தரக்கூடியவை அல்ல.

### உணவுத் தேவையில் தடுமாற்றம்

சீனாவின் மொத்த நிலப்பரப்பில் கால் பங்கு மட்டுமே விவசாயத்துக்கு ஏற்றது. அதனால், சீனா தலைகீழாக நின்றாலும், அதற்குத் தேவையான உணவை விளைவிக்க முடியாது. அப்படியென்றால், சீனா அதன் உணவுத் தேவைக்கு என்ன செய்கிறது? வெளிநாடுகளிலிருந்துதான் இறக்குமதி செய்கிறது. அடுத்த 5 ஆண்டுகளுக்கு, மிக அதிக அளவில் கோதுமை இறக்குமதி செய்வதற்கு சீனா ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது. இது உலக கோதுமை வர்த்தகத்தில் 50 சதவீதத்துக்கு மேல். இவ்வளவு கோதுமையை சீனா ஏன் இறக்குமதி செய்கிறது? காரணம், உணவுப் பற்றாக்குறையால் கலவரம் ஏற்படக் கூடாது என்பதில் சீன கம்யூனிஸ்ட் கட்சி மிகுந்த கவனத்துடன் இருக்கிறது. சுவாரஸ்யம் என்னவென்றால், சீனர்கள் கோதுமையை பிரதான உணவாகக் கொள்வதில்லை. அப்படியென்றால், இவ்வளவு கோதுமையை வைத்து சீனா என்ன செய்யப்போகிறது? சீனா தடுமாற்றத்தில் இருப்பதையே இது காட்டுகிறது.

### எரிசக்தித் தேவை

உலக எரிவாயு விநியோகத்தில் 90 சதவீதத்தை சீனா வாங்குகிறது. எரிசக்தி இறக்குமதி தொடர்பாக ரஷ்யாவுடன் சீனா நீண்டகால ஒப்பந்தம் மேற்கொண்டிருக்கிறது. ஆனால், உக்ரைன் உடனான போரைத் தொடர்ந்து ரஷ்யா அதன் எரிசக்தி விநியோகத்தில் திணறுகிறது. இதனால், சீனாவுக்கான விநியோகம் பாதிக்க வாய்ப்புள்ளது. ஆக, எரிசக்தி சார்ந்தும் சீனா பலவீனமான இடத்தில் உள்ளது.

கச்சா பொருட்களைப் பொறுத்தவரையில், வளம் பொருந்திய நாடுகளைக் குறிவைத்து சீனா செயற்பட்டு வருகிறது. ஆனால், தற்போது உலக நாடுகள் தங்கள் வளத்தைப் பாதுகாப்பதில் கவனம் செலுத்தத் தொடங்கியுள்ளன. ஆக, மசகுப்பொருள் சார்ந்து சீனாவுக்கு நெருக்கடி ஆரம்பித்துள்ளது.

இன்னொரு விடயம். சீனா அதன் யுவானை டொலருக்கு மாற்றான சர்வதேச நாணயமாக மாற்ற முயற்சி செய்து வருகிறது. துயரம் என்னவென்றால் வட கொரியா, பாகிஸ்தான், ரஷ்யா ஆகியவைதான் சீனாவின் இந்தத் திட்டத்துக்கு பெரும் ஆதரவு தரும் நாடுகள். சிரிப்புதான் வருகிறது. யுவான் சர்வதேச செலாவணியாக மாறவேண்டுமென்றால், மற்ற நாடுகள் சீனாவின் மீதும் அதன் நாணயத்தின் மீதும் பெரும் நம்பிக்கைக் கொள்ள வேண்டும். சீனாவை எந்த நாடுகள் நம்பும்?

### சீனாவின் இராணுவக் கட்டமைப்பு

சீனாகடைசியாக போரிட்டது 1979இல்தான். அதுவும் சிறிய நாடான வியட்நாமுக்கு எதிராக. அப்போதும் சீனாவின் மூக்கு உடைபட்டது. அதன் பிறகு சீனா போருக்குத் துணியவில்லை. சீனா நிறைய இராணுவ தளவாடங்களை வைத்திருக்கலாம். ஆனால், அதன் வீரர்கள் அணிவகுப்பு நடத்தத்தான் லாயக்கு. அவர்கள் சண்டையிடுவதில் ஆர்வம் காட்டுவதில்லை. தன் சொந்த வீரர்கள் மீது சீன கம்யூனிஸ்ட் கட்சிக்கு நம்பிக்கை கிடையாது. இதனால், போர் ஏற்படுவதை சீனா தவிர்க்கவே முயலும்.

### எல்லோருடனும் பகை

இறுதியாக, அடிப்படை அறிவு. உண்மையில் சீனாவுக்கு அடிப்படை அறிவே இல்லை. அது உலகத்திலிருந்து தன்னை துண்டித்துக்கொண்டுள்ளது. எந்த நாட்டுடனும் சீனாவுக்கு ஆரோக்கியமான உறவு இல்லை.

அப்படியென்றால், ஏன் எல்லாரும் இந்த காகிதப் புலியைப் பெரிதாக பார்க்கிறார்கள்? ஏன் அமெரிக்கா சீனாவுடன் தீவிர மோதல் மேற்கொள்ள தயங்குகிறது? காரணம், அமெரிக்கா சீனாவில் பெரும் முதலீடு மேற்கொண்டு இருக்கிறது. இதனால்தான் அமெரிக்காவின் கொள்கைகள் சீனாவை பிரதானப்படுத்தி அமைகின்றன. இதன் காரணமாகவே, 2 நாடுகளும் போருக்கு முயல்வதில்லை.

சரி, இந்த இரு நாடுகளுக்கு மத்தியில் இந்தியாவின் நிலை என்ன? சீனாவும் அமெரிக்காவும் இந்தியாவுக்குத் தேவையானவற்றை வழங்குகின்றன. குறைந்த விலையில் சீனா இந்தியாவுக்கு சரக்குகளை அனுப்புகிறது. அதிநவீன தொழில்நுட்பங்களை அமெரிக்கா அனுப்புகிறது. இதற்கு மேல் என்ன வேண்டும்? தற்கால இளைஞர்கள் மொழியில் சொன்னால், "கூல் ப்ரோ, கீப் அட் இட்..!"

*- ஸ்ரீநிவாச ராகவன்*
*(நன்றி - பிஸ்னஸ்லைன் )*

# மக்கள் வங்கியானது இலங்கை மக்களுக்கு வலுவூட்டுவதில் 62 ஆண்டுகளைக் கொண்டாடுகிறது





PEOPLE'S BANK
Pride of the Nation

இலங்கையின் வங்கி மற்றும் நிதிச் சேவைத்துறையில் முன்னோடியாகத் திகழும் மக்கள் வங்கி, ஆறு தசாப்தங்களுக்கும் மேலாக தேசத்திற்குச் சிறப்பை வழங்கும் மற்றும் சேவையாற்றுவதில் 62ஆவது ஆண்டு நிறைவை ஜூலை 01ஆம் திகதி கொண்டாடுகிறது. 14.7 மில்லியனுக்கும் மேலான வாடிக்கையாளர் தளம் மற்றும் ரூபா 3 டிரில்லியனுக்கும் அதிகமான திரட்டிய சொத்துகள் ஆகியவற்றுடன், இலங்கையில் பொது மக்களுக்கு வங்கிச்சேவை கோட்பாட்டை அறிமுகப்படுத்துவதில் முக்கிய பங்காற்றியுள்ளது. இன்று மக்கள் வங்கியானது நாட்டின் பெரும்பாலான கிராமப்புறங்களுக்கும் அதிநவீன டிஜிட்டல் வங்கி சேவைகளை வழங்குவதன் மூலம் தனது பொறுப்பை தொடர்ந்து முன்னெடுக்கிறது.

கடந்த பல ஆண்டுகளாக வங்கியானது தேசிய - சமூக - பொருளாதார மேம்பாட்டிற்கான உந்துசக்தியில் முக்கிய பங்காற்றியுள்ளது. இன்று நாடு முழுவதும் 745 சேவை மையங்கள் மூலமாக தனிநபர்கள் மற்றும் சிறிய, நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளுக்கு முழு அளவிலான வங்கிச் சேவைகளை வழங்கி வருகிறது. மக்கள் வங்கியானது அபிவிருத்தி மற்றும் சர்வதேச வர்த்தக நடவடிக்கைகளுக்கு கடன் வசதியளிப்பதன் மூலம் அரசாங்கத்திற்கு தனது ஆதரவை வழங்கி, நாட்டின் நலனுக்கான தனது அர்ப்பணிப்பை பலமுறை நிரூபித்துள்ளது.

தனது Mahajana Mehewara என்ற வர்த்தக சமூகப் பொறுப்புணர்வுத் திட்டத்தின் மூலம், தொற்றுநோய் பரவிய போது கொவிட்-19 நோயாளர்களுக்கு சிகிச்சையளிக்க பிரதான அரச மருத்துவமனைகளுக்கு ரூ. 20 மில்லியனுக்கும் அதிகமான மதிப்புள்ள முக்கிய மருத்துவ உபகரணங்களை வாங்குவதற்கு வங்கி தனது ஊழியர்களுடன் சேர்ந்து நிதியளித்துள்ளது. அது மேற்கொண்டுள்ள பல சமூக சேவை முயற்சிகளில், சீமாட்டி ரிட்ஜ்வே மற்றும் காசல் மருத்துவமனைகளுக்கு ரூ. 10 மில்லியனுக்கும் அதிகமான மதிப்புள்ள அத்தியாவசிய மருத்துவப் பொருட்களை நன்கொடையாக வழங்கியமை மற்றும் பின்தங்கிய பாடசாலைகளுக்கு சூரிய மின்சக்தியில் இயங்கும் மின்சார கட்டமைப்புகளை வழங்கியமை ஆகியவையும் அடங்கும்.

கூட்டுறவு வணிகம் மற்றும் கிராமிய வங்கிச்சேவை முறைமைகளை மேம்படுத்தும் நோக்கத்துடன், 1961ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க சட்டத்தின் கீழ் மக்கள் வங்கி நிறுவப்பட்டது. அப்போதைய பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கவின் தலைமையில் வர்த்தக, உணவு, கூட்டுறவு மற்றும் கப்பல் போக்குவரத்துத்துறை அமைச்சர் டி.பி.இலங்கரத்னவினால் இந்தச் சட்டம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. கூட்டுறவுத்துறைக்கு வங்கிச் சேவைகளை வழங்குவதில் முன்னோடியாகத் திகழ்ந்த வின்சென்ட் சுபசிங்க மக்கள் வங்கியின் முதல் தலைவராக இருந்தார்.

வங்கி அதன் தொடக்கத்திலிருந்தே, மக்களுக்கு சேவை செய்வதை நோக்கமாகக் கொண்டு செயற்படத் தொடங்கியது. இதன்படி, விவசாயக் கடன்கள், அடகு வைத்தல், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிக் கடன்கள், மகளிர் சேமிப்புக் கணக்குகள் மற்றும் சிறுவர் சேமிப்புக் கணக்குகள் போன்ற பலவற்றை முதன்முதலாக மக்கள் வங்கி நாட்டிற்கு அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த சேவை வழங்கல் கோட்பாடுகளில் பெரும்பாலானவை சமூகத்தால் மிகவும் பரவலாக ஏற்றுக்கொள்ளப்பட்டன. கிட்டத்தட்ட அனைத்து உள்நாட்டு வணிக வங்கிகளும் இப்போது பல்வேறு வர்த்தக நாமங்களில் அவற்றை வழங்குகின்றன.

நவீன உலகிற்கு ஏற்றவாறு, வாடிக்கையாளர்கள் எளிதாகவும், பாதுகாப்பாகவும், திறன் மிக்க வழியிலும் பரிவர்த்தனை செய்வதை உறுதி செய்வதற்காக, மக்கள் வங்கி தனது டிஜிட்டல் வங்கிச்சேவைத் திட்டத்தை 2015 இல் அறிமுகப்படுத்தியது. அதன் செயற்பாடுகளின் பெரும்பகுதியை உள்ளடக்கிய ஒரு விரிவான டிஜிட்டல் படிமுறை மாற்றத் திட்டத்தை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்த நாட்டின் முதல் வங்கி இதுவாகும். இதன் விளைவாக, மக்கள் வங்கி இப்போது அதன் அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் உலகத்தரம் வாய்ந்த டிஜிட்டல் வங்கிச்சேவை அனுபவத்தை வழங்குகிறது, அதன் பரிவர்த்தனை அளவில் 70 வீதம் டிஜிட்டல் வழிமுறைகளாக பரிவர்த்தனைகளாக செயலாக்கப்படுகிறது.

மக்கள் வங்கியின் மேன்மையால் அது உள்நாட்டிலும் சர்வதேச அளவிலும் தொடர்ந்து அங்கீகாரத்தைப் பெற்றுள்ளது. SLIM Nielsen மக்கள் அபிமான விருதுகள், தேசிய வர்த்தக மேன்மை விருதுகள் மற்றும் LankaPay Technnovation விருதுகள் ஆகியவை வங்கியால் பெறப்பட்ட சில உள்நாட்டு விருது அங்கீகாரங்களாகும். சர்வதேச அளவில், மக்கள் வங்கி தனிநபர் நிதிச் சேவைகளில் Asian Banker Excellence விருது, Asia Money Best Bank விருதுகள், SAFA விருதுகள், Asian Digital Finance Forum விருதுகள் போன்ற விருதுகளைப் பெற்றுள்ளது.

## இன்றைய நாளில்...

- 1837 – உலகின் முதலாவது அதிதூர ரயில் போக்குவரத்து, பர்மிங்காம் - லிவர்பூல் நகரங்களுக்கிடையே தொடங்கப்பட்டது.
- 1898 – நியூயார்க்கில் இருந்து லே ஆவர் சென்று கொண்டிருந்த கப்பல், சேபில் தீவுக்கருகில் வேறொரு கப்பலுடன் மோதி மூழ்கியதில் 549 பேர் உயிரிழந்தனர்.
- 1934 – அணுகுண்டுகளில் பின்னர் பயன்படுத்தப்பட்ட செயல் விளைவுத் தொடரின் வடிவமைப்புக்கு லியோ சிலார்ட் என்பவர் காப்புரிமம் பெற்றார்.
- 1951 – வில்லியம் ஷாக்லி ட்ரான்சிஸ்டரைத் தாம் கண்டுபிடித்ததாக அறிவித்தார்.
- 1982 – ஈரானிய தூதர்கள் மூவர் மற்றும் ஓர் ஊடகவியலாளர் லெபனானில் கடத்தப்பட்டனர். இவர்கள் என்ன ஆனார்கள் என்பது தற்போதுவரை அறியப்படவில்லை.
- 1988 – வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவையின் முதல் தமிழ் மாநாடு பென்சில்வேனியாவில் நடைபெற்றது.
- 1997 – நாசாவின் பாத்ஃபைண்டர் விண்கலம் செவ்வாய்க் கிரகத்தில் இறங்கியது.
- 1998 – ஜப்பான், நொசோமி விண்கலத்தை செவ்வாய்க் கிரகத்தை நோக்கி ஏவியது.

## நக்கல் நமசிவாயம்

*எதிர்க்கட்சித் தலைவரா வாறதுக்கு நாமல் முயற்சி செய்யுறாராம்... எப்படியோ, எண்டைக்கோ ஒரு நாள் எதிர்க்கட்சியில் உட்காரப் போறதவிட இப்பவே உட்காரலாம் எண்டு நினைச்சிட்டாராக்கும்..!*



# உயர்தரத்தின் பின்னர் உயர் கல்வியைத் தொடர ஆர்வமுள்ளவர்களுக்கு வட்டியில்லாக் கடன்

## இன்று முதல் விண்ணப்பிக்க முடியுமென அரசாங்கம் அறிவிப்பு



நாட்டில் கடந்த 2019, 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய 5,000 மாணவர்களுக்கு தனியார் பல்கலைக் கழகங்களில் கல்வி கற்பதற்காக வட்டியில்லாக் கடனைப் பெற்றுக்கொடுக்கும் வேலைத்திட்டத்துக்கு விண்ணப்பிக்கும் நடவடிக்கைகள் இன்றுமுதல் (04) ஆரம்பமாவதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

மேலும், இந்த வேலைத்திட்டத்தின் கீழ் கல்வி நடவடிக்கைகளை முன்னெடுக்கும் மாணவர்கள் தொழில்சார் கற்கைநெறிகளைத் தொடர வேண்டுமென்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் நேற்று (03) ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே இதனைக் குறிப்பிட்டார்.

தொடர்ந்து அவர் தெரிவிக்கையில்,

அதற்கமைய, 2019, 2020 மற்றும் 2021 ஆகிய வருடங்களில் உயர் தரப் பரீட்சைக்குத் தோற்றிய 5,000 மாணவர்களுக்கு தனியார் பல்கலைக்கழகங்களில் கல்வி கற்பதற்காக வட்டியில்லாக் கடனைப் பெற்றுக்கொடுக்கும் வேலைத்திட்டத்துக்கு அனுமதி கிடைக்கப் பெற்றுள்ளது. இன்று (04) முதல் எதிர்வரும் 07 ஆம் திகதி வரையில் விண்ணப்பிக்க முடியும்.

மூன்று வருடங்களாக உயர் தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கு இதற்கு விண்ணப்பிப்பதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. நாட்டில் உயர் கல்வியைப் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பு கிடைக்காத மாணவர்களுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்படும் நிவாரணமாகவே இதனைக் கருதுகிறோம்.

மாணவர்களின் கல்வி நலன்கருதி இதற்கான முழு வட்டியும் அரசாங்கத்தினால் செலுத்தப்படும். இதன்போது தொழில்சார் கற்கை நெறிகளுக்கு முக்கியத்துவம் வழங்கப்படும். எங்களின் அனுபவத்துக்கமைய இதற்கு முன்னரும் இதுபோன்ற வேலைத்திட்டங்களைப் பெற்றுக்கொடுத்திருந்தாலும் 90 சதவீதத்துக்கும் அதிகமான மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்கு அப்பால் உடனடி தொழில்சார் கற்கை நெறிகளைத் தெரிவுசெய்துள்ளனர்.

மறுபுறம் இதற்காக போட்டிநிலை உருவானால் மக்களில் வெட்டுப்புள்ளியின் அடிப்படையில் தீர்மானிக்கப்படும். அதற்கமைய சட்டபூர்வமான தனியார் பல்கலைக்கழகங்களுக்குச் செல்ல திறமையுடைய, சரியான கற்கை நெறிகளைத் தொடரும் மாணவர்களுக்கு மாத்திரமே இந்த வாயப்பு கிடைக்கும் - என்றார்.





புளிச்சாக்குளம் ஸ்ரீ ஞான வைரவர் ஆலயத்தின் புனரமைப்புப் பணிகள் நிறைவடைந்து அந்த ஆலயத்தின் மகா கும்பாபிஷேக நிகழ்வு நேற்று (03) நடைபெற்றது. இதில் பல நூற்றுக்கணக்கான பக்தர்கள் கலந்துகொண்டு வைரவ சுவாமியின் அருளைப் பெற்றுக்கொண்டனர். (படங்கள் - உடப்பு செய்தியாளர்)

# காதலியை தாக்கிய பொலிஸ் அதிகாரி பணியிலிருந்து இடைநிறுத்தம்!

தனமல்வில, ரணவர பிரதேசத்தில் வசிக்கும் யுவதி ஒருவரின் வீட்டிற்குள் பலவந்தமாக நுழைந்து யுவதியை தாக்கி காயப்படுத்திய பொலிஸ் கான்ஸ்டபிள் பணியிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளதாகப் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

சந்தேக நபரின் காதலி எனக் கூறப்படும் யுவதி ஒருவரே இவ்வாறு தாக்கப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கிளிநொச்சி பொலிஸ் பிரிவில் கடமையாற்றும் பயிலுனர் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரே இவ்வாறு பணியிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றுள்ளது. சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் விசாரணைகளை மேற்கொண்டதுடன் சந்தேகத்திற்குரிய கான்ஸ்டபிளை நேற்று முன்தினம் (02) பணியிலிருந்து இடைநிறுத்தம் செய்ய நடவடிக்கையும் எடுக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபர் தொடர்பில் திஸ்ஸமஹாராம நீதவான் நீதிமன்றத்திலும் அறிக்கை சமர்ப்பித்துள்ளதாகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.





நுவரெலியா- பதுளை வீதி இலக்கம் 60 தில் அமைந்துள்ள ஸ்ரீ மதுர கணபதி ஆலய வருடாந்த தேர்த்திருவிழா நேற்று முன்தினம் (02) நடைபெற்றது. வெள்ளிக்கிழமை (30) காலை ஆலய பிரதம குருக்கள் பிரம்மஸ்ரீ கோ. சிவபெருமாள் தலைமையில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

**படங்கள்:** ஆ.ரமேஸ்

# கடும் மழையினால் வான்கதவுகள் திறப்பு



எஸ்.கணேசன்

மத்திய மலைநாட்டில் பெய்துவரும் கடும் மழை காரணமாக மலையகத்தில் இருக்கின்ற நீரேந்தும் பகுதிகளில் நீர்மட்டம் அதிகரித்துக் காணப்படுகின்றது.

இதன் காரணாக நீரோடைகள், ஆறுகள் என பெருக்கெடுத்து நீரேந்தும் பகுதிகளில் நீர் மட்டம் அதிகரித்துள்ளது.

மேல் கொத்மலை, விமலசுரேந்திர, காசல்ரீ ஆகிய நீரேந்தும் பகுதிகளில் நீர்மட்டம் உயர்வடைந்து காணப்பட்டது. நீரை வெளியேற்றுவதற்காக நேற்று (03) வான்கதவுகள் திறக்கப்பட்டன.

அந்தவகையில் மேல் கொத்மலை நீர்த்தேக்கத்தில் வான்கதவு ஒன்று திறக்கப்பட்டிருந்தது.

இதனால் நீர்த்தேக்கப் பகுதிகளில் தாழ்வான பிரதேசத்தில் வாழ்கின்ற குடியிருப்பாளர்களை அவதானத்துடன் இருக்கும் படி அதிகாரிகளினால் பணிக்கப்பட்டுள்ளது.

மேலும், விமலசுரேந்திர நீர்த்தேக்கமும் முழுமையாக நிரம்பி மேலதிக நீர் வான் மேவிப் பாய்ந்ததை நேற்று அவதானிக்கக் கூடியதாக இருந்தது. இதனால் அணைக்கட்டிற்கு கீழ்ப் பகுதியில் ஆற்றைப் பயன்படுத்துபவர்கள் அவதானத்து டன் இருக்குமாறு வேண்டுகோள் விடுக் கப்பட்டுள்ளதோடு, களனி ஆற்றைப் பயன்படுத் துபவர்களும் அவதானத்துடன் இருக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# நீராடச் சென்ற சிறுவர்கள் இருவர் பலி!





பதவியஸ்ரீபுர பிரதேசத்தில் யான் ஓயா நீர்த்தேக்கத்திலிருந்து நெற்பயிர்களுக்கு நீரை வெளியேற்றும் கால்வாயில் நீந்திக் கொண்டிருந்த சிறுவர்கள் இருவர் உயிரிழந்துள்ளனர். 13 மற்றும் 14 வயதுடைய இருவரே உயிரிழந்துள்ளதுடன் மரத்திலிருந்து நீர்த்தேக்கத்தில் குதிக்கும் போது தலைகள் மோதி நீரில் மூழ்கியமையினாலேயே இவர்கள் இவ்வாறு உயிரிழந்துள்ளனர் எனத் தெரியவருகிறது.

இந்தச் சம்பவம் கடந்த சனிக்கிழமை பிற்பகல் 3.45 மணியளவில் இடம்பெற்றதாக பதவி ஸ்ரீபுர பொலிஸார் தெரிவித்தனர். இவர்கள் இருவரும் வேறு சில நண்பர்களுடன் சுமார் ஐந்தரை அடி ஆழமுள்ள கால்வாயில் குளிக்கச் சென்றுள்ளனர். மரத்தில் ஏறி வாய்க்காலில் குதித்து வெகுநேரம் சிறுவர்கள் குளித்து முடித்து கரைக்குச் சென்றுள்ளனர். அதன்பின், நீரில் மூழ்கிய சிறுவர்கள் இருவரும் மீண்டும் ஒருமுறை கால்வாய் கரையில் உள்ள மரத்தில் ஏறி கால்வாயில் குதித்தபோது, இருவரின் தலைகளும் மோதியதில் இருவரும் தண்ணீரில் மாயமாகினர்.பிரேத பரிசோதனை நேற்று முன்தினம் (02) பதவிய ஆதார வைத்தியசாலையில் நடைபெறவிருந்த நிலையில், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பதவியஸ்ரீபுர பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.


ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board

ஞாயிற்றுக்கிழமை 2023.07.02

உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk

NLB

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 5163 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 13,141,096.00
ஆங்கில எழுத்து C — வெற்றி இலக்கங்கள் 5 2 2 6 4 4

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3405 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 67,256,334.80
ஆங்கில எழுத்து R — வெற்றி இலக்கங்கள் 07 11 57 76

ஜாதிக சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 1618 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.13,149,734.32
வெற்றி இலக்கினம் — வெற்றி இலக்கங்கள் 7 7 8 5 6 3

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் 1193 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 97,722,600.40
ஆங்கில எழுத்து H — வெற்றி இலக்கங்கள் 21 51 55 72

ராசி சுப பலன் Handahana — சீட்டிழுப்பு இலக்கம் 472 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,548,404.80
வெற்றி இலக்கினம் தனுசு — வெற்றி இலக்கங்கள் 06 16 26 47 — விசேட இலக்கினம் தனுசு

Mega POWER — சீட்டிழுப்பு இலக்கம் 1511 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 333,814,798.00
ஆங்கில எழுத்து D — சுப்பர் இலக்கம் 21 — வெற்றி இலக்கங்கள் 01 23 37 46
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00


# சட்டவிரோத மதுபான உற்பத்தியில் ஈடுபட்டவர் பொலிஸாரால் கைது

யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்திற்கருகில் சட்டவிரோத மதுபான உற்பத்தியில் ஈடுபட்ட 28 வயதுடைய நபரொருவர் மாவட்டப் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்டவரிடமிருந்து சட்டவிரோத மதுபான உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் 30 வீற்றர் கோடா மற்றும் உபகரணங்களும் மீட்கப்பட்டுள்ளன.

யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் மாவட்டப் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து குறித்த கைதுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

# அஸ்வெசும பயனாளர்களுக்கு நியாயமான தீர்வு கிடைக்கும்

## சாகல ரத்னாயக்க நம்பிக்கை தெரிவிப்பு

எஸ்.கணேசன்



அஸ்வெசும வேலைத்திட்டத்தின் மேன்முறை யீடுகள் மற்றும் ஆட்சேபனைகள் தொடர்பில் பரிசீலனை நடத்தப்பட்டு குறைந்த வருமானம் பெறும் பயனாளிகளுக்கு நியாயமான தீர்வு வழங்கப்படுமென்று ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினரும் ஜனாதிபதி பணியாட் தொகுதி பிரதானியுமான சாகல ரத்னாயக்க தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் மஸ்கெலியா தொகுதிக்கான உறுப்பினர்களைத் தெரிவு செய்யும் கூட்டம் ஹட்டன் நகரில் உள்ள தனியார் மண்டபமொன்றில் அண்மையில் நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

''துன்பத்தின் பிடிக்குள் சிக்கியிருந்த நாட்டு மக்களை மீட்டெடுத்த சிறந்த தலைவரே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. அஸ்வெசும திட்டம் தொடர்பில் இதுவரை 4 இலட்சத்து 91 ஆயிரம் மேன்முறையீடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

அதேவேளை, 6 ஆயிரத்து 773 ஆட்சேபனைகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

குறித்த மேன்முறையீடுகள் மற்றும் ஆட்சேபனைகள் தொடர்பில் பரிசீலனை நடத்தப்பட்டு குறைந்த வருமானம் பெறும் பயனாளிகளுக்கு நியாயம் கிடைக்கும். அஸ்வெசும திட்டத்தின் ஊடாக நிவாரணம் வழங்கப்படும்.

ஐக்கிய தேசியக் கட்சியை கிராமிய மட்டத்தில் பலப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்." - எனவும் அவர் கூறினார்.


# வாகன ஏல விற்பனை - கொட்டாவ

| வாகன இல | தயாரிப்பு | மாதிரி | வாகன இல | தயாரிப்பு | மாதிரி |
|---|---|---|---|---|---|
| WP BFV-11XX | HONDA | DIO | CP BIK-44XX | YAMAHA | FZ-VER 2.0 |
| WP BIH-11XX | HONDA | DIO | WP BIO-58XX | YAMAHA | RAY ZR |
| SP BFW-14XX | HONDA | DIO | WP BFZ-46XX | YAMAHA | RAY ZR |
| WP BFL-05XX | HONDA | DIO | UP BHE-89XX | YAMAHA | FZ |
| WP BHW-80XX | HONDA | DIO | WP BHE-03XX | YAMAHA | FZ VER 2.0 |
| WP BEF-40XX | HONDA | DIO | NC BDY-66XX | YAMAHA | FZ S |
| UP BBY-30XX | HONDA | DIO | WP BDD-37XX | YAMAHA | FZ S |
| WP BGY-86XX | HONDA | DIO | CP BBH-82XX | BAJAJ | PULSER |
| WP BGN-91XX | HONDA | DIO | SG BDZ-73XX | BAJAJ | PULSAR NS 200 |
| WP BEZ-55XX | HONDA | DIO | WP BFV-30XX | BAJAJ | PULSAR NS 200 |
| WP BGT-28XX | HONDA | DIO | WP BDL-56XX | BAJAJ | PULSAR |
| SG BFI-13XX | HONDA | DIO | WP BDE-53XX | BAJAJ | CT 100 |
| NW BIH-35XX | HONDA | DIO | WP BAL-66XX | BAJAJ | DISCOVER DTS-SI 100 |
| SGBIP61XX | HONDA | DIO | CP BAG-67XX | BAJAJ | PULSAR 150CC |
| WP BFF-77XX | HONDA | DIO | NC BDL-52XX | BAJAJ | PULSAR 180 |
| WP BED-60XX | HONDA | DIO | WP BIA-94XX | HONDA | NAVI |
| WP BHL 19XX | HONDA | DIO | WP BIA-95XX | HONDA | NAVI |
| WP BHX 21XX | HONDA | DIO | WP BIA-96XX | HONDA | NAVI |
| UP BHA 86XX | HONDA | DIO | SG BFB-40XX | HONDA | NAVI |
| WP BIA-14XX | HONDA | DIO | WP BIW-99XX | TVS | NTORQ |
| WP BEU-56XX | HONDA | DIO | NW BCM-51XX | TVS | METRO |
| SG-BIR-62XX | HONDA | DIO | SGBIQ-56XX | TVS | NTORQ |
| WP BHW-68XX | HONDA | DIO | WP BIZ-68XX | TVS | NTORQ |
| WP BHJ-89XX | HONDA | DIO | UP BBH-66XX | TVS | METRO |
| WP BHP-03XX | HONDA | DIO | CP BHN-96XX | TVS | NTORQ |
| WP BCY-31XX | HONDA | DIO | SG BIS-33XX | TVS | NTORQ |
| WP BGS-83XX | HONDA | DIO | WP BHJ-70XX | HERO | MAETRO EDGE |
| WP BIH-72XX | HONDA | DIO | WP YS-05XX | BAJAJ | RE 205 |
| SG BGD-83XX | HONDA | DIO | WP QA-38XX | BAJAJ | 2stroke |
| WP BIR-32XX | HONDA | DIO | SG GG-21XX | BAJAJ | 2stroke |
| WP BFY-62XX | HONDA | DIO | CP QI-30XX | BAJAJ | 2stroke |
| WP BFH-40XX | HONDA | DIO | UP YS-05XX | BAJAJ | RE 205 |
| WP BHV-56XX | HONDA | DIO SCV 110 | WP QP-44XX | BAJAJ | 4stroke |
| WP BIJ-74XX | HONDA | DIO SCV 110 | WP QT-36XX | BAJAJ | 4stroke |
| WP BGY-01XX | HONDA | DIO SCV 110 | CP QN-56XX | BAJAJ | 4stroke |
| WP BGN-50XX | HONDA | DIO SCV 110 | SG QK-19XX | BAJAJ | 4stroke |
| WP BFD-69XX | HONDA | DIO SCV 110 | WP YL 02XX | BAJAJ | 4stroke |
| WP BII-60XX | HONDA | DIO SCV 110 | WP QP-17XX | BAJAJ | 4stroke |
| CP XS-78XX | HONDA | DIO SCV 110 | WP YT-76XX | BAJAJ | 4stroke |
| WP BGK-04XX | HONDA | DIO SCV 110 | WP QS-24XX | BAJAJ | 4stroke |
| WP BIH-72XX | HONDA | DIO SCV 110 | CP QP-02XX | BAJAJ | 4stroke |
| WP BGJ-51XX | HONDA | DIO SCV 110 | CP QV-91XX | BAJAJ | 4stroke |
| WP BES-84XX | HONDA | DIO | CP ABB-97XX | BAJAJ | 4stroke |
| WP BGX-76XX | HONDA | DIO SCV 110 | CP QX-50XX | BAJAJ | 4stroke |
| WP BHI-22XX | HONDA | DIO SCV 110 | CP QX-81XX | BAJAJ | 4stroke |
| WP BGT-29XX | HONDA | DIO SCV 110 | CP QP-40XX | BAJAJ | 4stroke |
| WP BDX-21XX | HONDA | DIO SCV 110 | UP YB-03XX | BAJAJ | 4stroke |
| CP BFL-34XX | HONDA | DIO SCV 110 | CP QQ-31XX | BAJAJ | 4stroke |
| WP BIO-72XX | HONDA | DIO SCV 110 | SG AAO-31XX | BAJAJ | 4stroke |
| WP BDG-92XX | HONDA | DIO SCV 110 | SP QM-41XX | BAJAJ | 4stroke |
| SG BIE-44XX | HONDA | DIO SCV 110 | WP QS-97XX | BAJAJ | 4stroke |
| WP BIJ-35XX | HONDA | DIO SCV 110 | WP QE 18XX | BAJAJ | 4stroke |
| CP BID-00XX | HONDA | DIO SCV 110 | CP QL-94XX | BAJAJ | AUTO AR4S |
| CP BDS-81XX | HONDA | DIO SCV 110 | WP BFP-42XX | RANO | DREAM 125 |
| WP BGM-42XX | YAMAHA | RAY ZR | WP BIF-88XX | HONDA | GRAZIA |
| WP BFJ-97XX | YAMAHA | RAY ZR | SG-BHK-31XX | HONDA | Grazia APP8 |
| WP BEZ-68XX | YAMAHA | RAY ZR | SGBIM12XX | HONDA | GRAZIA |
| WP BEU-80XX | YAMAHA | RAY ZR | 13-90XX | HONDA | CIVIC |
| WP BHZ-99XX | YAMAHA | FZ | 227-30XX | MAZDA | TITAN |
| UP BBB-15XX | YAMAHA | FZ | WP BFQ-84XX | HERO | MAESTRO EDGE |
| UP BGB-26XX | YAMAHA | RAY ZR | WP HA-75XX | MERCEDES-BENZ | C200KOMORESSOR |
| CP BGA-56XX | YAMAHA | RAY ZR | UP KD -12XX | SUZUKI | ALTO |
| SP BGK-66XX | YAMAHA | RAY ZR | WP BIN-17XX | YAMAHA | STRRET RALLY |
| WP BGA-69XX | YAMAHA | RAY ZR | WP CAX-21XX | RENULT | KWID |
| SG BIG-50XX | YAMAHA | RAY ZR | WP CAP-42XX | SUZUKI | WAGON R |
| WP BIL-95XX | YAMAHA | RAY ZR | WP YX-26XX | PIAGIO | APE |
| WP BFM-27XX | YAMAHA | RAY ZR | 51-68XX | NISSAN | CARAVAN |
| WP BIS-37XX | YAMAHA | RAY-ZR | WP ZB-17XX | JCB | 3CX |
| WP BIP-99XX | YAMAHA | MT-15 | | | |
| WP BDX-58XX | YAMAHA | FZ - S | | | |
| WP BAS-55XX | YAMAHA | FZ S | | | |

கொட்டாவ ஹொரண வீதியின் பின்ஹேன சந்தி 17/1 என்ற இலக்கத்திலுள்ள வாகன களஞ்சியசாலையில் ஜூலை 4 மற்றும் 5 ஆம் திகதிகளில் காலை 8.30 முதல் மாலை 4.30 வரை வாகனங்களை பார்வையிடலாம்.

எதுவித முன்னறிவித்தலுமின்றி எந்தவொரு வாகனத்தையும் சந்தையிலிருந்து வெளியேற்றக்கூடிய அதிகாரம் முகாமைத்துவத்திற்கு

ஏல விற்பனைத் திகதி9 ஜுலை 2|நேரம்9 2 மு ப

(சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றி)

விஸ்வா - 0774787096

தொலைபேசி - 0117308080 வட்ஸ்அப் - 071 0356125

ANA AUCTIONEER Black Tie Service with True Aloha!

ඒ එන් අල්ගෙවත්ත ඔක්ෂනිය(ර්)
A N ALGEWATHTHA AUCTIONEER
#333, Janajaya City, Rajagiriya.
+94 71 790 5790 | info@anaauctioneer.com
www.anaauctioneer.com

AMF
அசோசியேட்டட் மோட்டார் பினான்ஸ் கம்பனி பிஎல்சி
தலைமையகம்
035, ஹெவ்லொக் வீதி, திம்பிரிகஸ்யாய
தொலைபேசி 00444 55

# முருங்கன் இசைமாளத்தாழ்வு பிரதான வீதியில் விபத்து

## அருட்தந்தை அன்ரனி விக்டர் சோசை அடிகளார் உள்ளடங்கலாக மூவர் காயம்





மன்னார் நகர் நிருபர்

மன்னார்-மதவாச்சி பிரதான வீதி,இசைமாளத்தாழ்வுப் பகுதியில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை(2) மாலை இடம்பெற்ற விபத்தில் மன்னார் மறைமாவட்டத்தின் முன்னாள் குரு முதல்வரும் மன்னார் மறைமாவட்ட கத்தோலிக்க இளைஞர் ஆணைக்குழுவின் இயக்குனருமான அருட்தந்தை அன்ரனி விக்டர் சோசை அடிகளார் உள்ளடங்கலாக மூவர் காயமடைந்துள்ளனர்.

மடு திருத்தலத்தின் ஆடி மாத திருவிழா திருப்பலி நிறைவடைந்த நிலையில், நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை (2) மாலை அருட்தந்தை அன்ரனி விக்டர் சோசை அடிகளார், சாரதி மற்றும் உதவியாளர் ஆகிய மூவரும் மடு திருத்தலத்திலிருந்து மன்னார் நோக்கி ஹயஸ் ரக வாகனத்தில் பயணித்துள்ளனர்.

இதன்போது அவர் பயணித்த வாகனம் மதவாச்சி - மன்னார் பிரதான வீதி,இசைமாளத்தாழ்வுப் பகுதியில் கட்டுப்பாட்டை இழந்த நிலையில் வீதியின் அருகிலுள்ள கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இதன்போது காயமடைந்த அருட்தந்தை அன்ரனி விக்டர் சோசை அடிகளார் உள்ளடங்கலாக மூவரும் உடனடியாக அம்புலன்ஸ் வண்டி மூலம் முருங்கன் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

தற்போது அருட்தந்தை அன்ரனி விக்டர் சோசை அடிகளார் உள்ளடங்கலாக மூவரும் சிறு காயங்களுடன் சிகிச்சை பெற்று வருவதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தகவல் தெரிவிக்கின்றன.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை முருங்கன் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.





**முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் மறவன்புலவு சச்சிதானந்தத்தின் தென்மராட்சி வீட்டிற்கு சிநேகித பூர்வமான பயணமொன்றை மேற்கொண்டிருந்தார். யாழ்ப்பாணத்திற்கு நான்கு நாட்கள் விஜயம் மேற்கொண்டிருந்த முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால மறவன்புலவு சச்சிதானந்தத்தின் அழைப்பின் பேரில் வீடு தேடிச் சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.**

வடக்கு செய்திகள்
thamilannorth@gmail.com

# 9ஆவது அகவையை நோக்கி அடியெடுத்து வைக்கும் வவுனியா LCDC CAMPUS



வவுனியா செய்தியாளர்

வவுனியாவில் ஆங்கில கல்விக்கென தனித்துவமான இடத்தை தன்னகத்தே கொண்டு இயங்கி வந்த LCDC CAMPUS தனது 9ஆவது அகவையை நோக்கி அடியெடுத்து வைத்துள்ளது.

சுந்தரலிங்கம் பார்த்தீபன் என்பவரின் தனிப்பட்ட முயற்சியில் 10 மாணவர்களுடன் உருவாகிய கல்லூரி இன்று 1,000 க்கும் மேற்பட்ட மாணவர்களை உள்ளடக்கி ஒரு விருட்சமாக வானுயர்ந்து நிற்கின்றது..

தனியார் கல்வி நிறுவனம் என்றாலே அதன் அடிப்படை நோக்கம் பணமாகத்தான் இருக்கும். ஆனால், இக்கல்லூரியானது பணத்திற்காக இல்லாமல் ஏழ்மையான மாணவர்களின் கல்வித் தேவையை Lingam foundation என்பதன் மூலம் இலவச ஆங்கிலக் கல்வியை 500 இற்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு வழங்கி வழிநடத்தி வருகின்றது என்றால் மிகையாகாது.

தனிப்பட்ட ஒரு நபரின் முயற்சியில் சிறிதாக உருவாகிய இக்கல்லூரி ஒன்பதாவது ஆண்டில் அடியெடுத்து வைத்திருக்கும் இத்தருணத்தில் தனது தலைமைக் காரியாலயத்தை canada வில் நிறுவியுள்ளது. இதன் பெருமை இக்கல்லூரியின் முதல்வரான சுந்தரலிங்கம் பார்த்தீபன் என்பவரை மட்டுமே சாரும்.




LINCOLN CAREER DEVELOPMENT COLLEGE ( PVT ).LTD

Canada வில் மட்டுமல்லாமல், யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், திருகோணமலை, கொழும்பு ஆகிய இடங்களிலும் தனது கிளைகளை நிறுவி விஸ்தரித்து செயற்பட்டு வருகின்றது.

வவுனியாவில் ஆங்கில மொழிக்காக மட்டுமே இயங்கி வருகின்ற இக்கல்லூரி தன்னிடம் கல்வி கற்க வருகின்ற மாணவர்களை canada and London நாடுகளுக்குச் செல்வதற்கான students visa வையும் செய்து மாணவர்களின் வெளிநாட்டுக் கல்வியையும் நிறைவேற்றி வைக்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

# யாழில் மீட்கப்பட்ட ஜெலட்டின் குச்சிகள்



யாழ்ப்பாணம் - பாசையூர் பகுதியிலுள்ள பாழடைந்த வீட்டிலிருந்து வெடிமருந்துகள் மீட்கப்பட்டுள்ளன.

இராணுவத்தினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் யாழ்ப்பாண விசேட பொலிஸ் அதிரடிப் படையினருக்கு தகவல் வழங்கப்பட்டு குறித்த வெடிமருந்துகள் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மீட்கப்பட்டுள்ளன.

பொதி ஒன்றினுள் இருந்த 20 ஜெலட்டின் குச்சிகளே மீட்கப்பட்டுள்ளன.

மீட்கப்பட்ட ஜெலட்டின் குச்சிகள் மேலதிக நடவடிக்கைகளுக்காக யாழ்ப்பாண பொலிஸாரிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

குறித்த ஜெலட்டின் குச்சிகளில் உள்ள வெடிமருந்துகளைப் பிரித்தெடுத்து மீன் பிடிக்கான டைனமைட் தயாரிக்க மீனவர்கள் பயன்படுத்துவதும் குறிப்பிடத்தக்கது.

டைனமைட் பயன்படுத்தி மீன் பிடிப்பது சட்டவிரோத செயலாகும்.

# 200 வருடங்கள் பழமைவாய்ந்த ஆண்டான் குளம் கல்வயலில் புனரமைப்பு

சாவகச்சேரி நிருபர்

தென்மராட்சி-கல்வயல் பகுதியில் 200வருடங்கள் பழமைவாய்ந்த ஆண்டான் குளம் இளைஞர்களின் முன்மாதிரியான செயற்பாட்டினால் புனரமைக்கப்பட்டுள்ளது.

மேற்படி குளம் முற்றுமுழுதாகக் கைவிடப்பட்டிருந்த நிலையில் கல்வயல் இளைஞர்கள் கல்வயல் சமூக சேவா சங்கம் ஊடாக குளத்தைப் புனரமைப்புச் செய்து பராமரித்து வருகின்றனர். "கோவில்களைப் போன்று குளங்களும் எம் மரபுரிமையே-ஆறுகள் அற்ற யாழ்ப்பாணத்திற்கு குளங்களே மூலாதாரம்" என்ற சிந்தனைக்கமைவாக கல்வயல் இளைஞர்கள் மேற்படி நற்காரியத்தில் ஈடுபட்டுள்ளமை சிறப்பம்சமாகும்.





# பெருந்தோட்டப் பகுதி இளைஞர்களுக்கு வெறுப்புப் பேச்சு தொடர்பான செயலமர்வு

கண்டி நிருபர்

நாவலப்பிட்டி, கலமடயில் கண்டி மாவட்ட சர்வமத அமைப்பினால் பெருந்தோட்டப் பகுதி மாணவர்களுக்கும் இளைஞர்களுக்கும் வெறுப்புப் பேச்சு தொடர்பான செயலமர்வு ஒன்று நடத்தப்பட்டது.





இதில் வெறுப்புப் பேச்சுகள் என்றால் என்ன, அதனை எவ்வாறு தவிர்த்துக்கொள்வது, அதனை ஏன் தவிர்த்துக்கொள்ளவேண்டும் என்பது போன்ற பல்வேறு விடயங்கள் தொடர்பான விளக்கங்களும் நுட்பங்களும் செயன் முறைகளும் வழங்கப்பட்டன.

# மனித அபிவிருத்தி தாபனத்தின் தேசிய மொழிக் கொள்கை தொடர்பான செயலமர்வு





கண்டி நிருபர்

கண்டியைத் தலைமையகமாகக் கொண்டு இயங்கும் மனித அபிவிருத்தி தாபனம் மலையக மக்களுக்கு தேசிய மொழிக் கொள்கை தொடர்பான செயலமர்வொன்றை நடத்தியது.

இச்செயலமர்வானது மனித அபிவிருத்தி தாபனத் தலைவர் கலாநிதி பி.பி.சிவப்பிரகாசம் தலைமையில் ஹில்கூல் விடுதியில் இடம்பெற்றது. இதில் கொட்டக்கலை மற்றும் தலவாக்கலை பிரதேசங்களில் வாழும் பெருந்தோட்ட மக்கள் பலர் கலந்துகொண்டனர்.

இலங்கையில் தேசிய மொழிக் கொள்கையில் மலையக சமூகம் உரிமையுடன் வாழவேண்டும் என மனித அபிவிருத்தி தாபனம் தேசிய மொழிகள் சமத்துவ மேம்பாட்டு செயற்றிட்டத்தின் ஊடாக கொட்டக்கலையில் செயலமர்வொன்றை நடத்தியது.

அரச நிறுவனங்களில் உரிமைகளைப் பெற்றுக் கொள்வது தொடர்பில் இந்தச் செயலமர்வில் விளக்கமளிக்கப்பட்டது. 'மொழி உரிமை மற்றும் சமூக ஒருமைப்பாடு' எனும் தலைப்பில் இது ஒழுங்குசெய்யப்பட்டிருந்தது.

கடந்த 29 ஆண்டுகளாக தேசிய மொழி உரிமை மற்றும் மனித அபிவிருத்திக்கென பல வேலைத்திட்டங்களை கண்டி, நுவரெலியா, கேகாலை மற்றும் அம்பாறை போன்ற பகுதிகளில் முன்னெடுத்து வருகின்றது. அதன் ஓரங்கமாகவே இது நடைபெற்றது.

இந்தச் செயலமர்வில் தலவாக்கலை பிரதேச செயலகத்தின் செயலாளர் சசிபிரபா பிரேமசிங்ஹ, தேசிய மொழிகள் சமத்துவ மேம்பாட்டு செயற்றிட்டப் பிரதிப் பணிப்பாளர் சட்டத்தரணி எம். திருநாவுக்கரசு, மனித அபிவிருத்தி தாபன ஆலோசகரும் சட்டத்தரணியுமான அ.செல்வராஜ் உள்ளிட்ட சகவாழ்வு சங்க உறுப்பினர்கள், சமூக செயற்பாட்டாளர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள் ,அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# சாரணர்களாகப் பயிற்சி பெற்ற அதிபர்கள், ஆசிரியர்கள் நுவரெலியாவில் கௌரவிப்பு



ஆ.ரமேஸ்.

சாரணர் இயக்கத்துடன் இணைந்து பயிற்சியை நிறைவுசெய்துகொண்ட நுவரெலியா உயர்தர பெண்கள் தேசிய பாடசாலையின் அதிபர் உட்பட அனைத்து ஆசிரியர்களுக்கும் பதக்கங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இந்தக் கௌரவிப்பு நிகழ்வு பெண்கள் தேசிய பாடசாலையின் அதிபர் எச்.டி.பி.நிர்மலா தலைமையில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இதில் நுவரெலியா சாரணர் இயக்கத்திற்காக பயிற்சி பெற்றுக்கொண்டு சத்தியப்பிரமாணம் செய்துகொண்ட ஆசிரியர்களுக்கும் அதிபர்களுக்கும் சாரணர் இயக்கத்தின் பதில் மாவட்ட ஆணையாளரும் வலயக் கல்விப் பணிப்பாளருமான லசந்த அபேரத்ன பதக்கங்களை வழங்கி கௌரவித்தார்.



அதேநேரம், நுவரெலியா வலயக் கல்வி வலயத்தில் ஆசிரியர்களும் சாரணர் இயக்கத்துடன் ஒன்றிணைந்து பயிற்சிபெற்று கௌரவிக்கப்பட்டமை இதுவே முதற் தடவையாகும்.

மலையக செய்திகள்
thamilanmalayagam@gmail.com

# பாடசாலைகள் இரண்டை ஒன்றிணைப்பது தொடர்பாக மாத்தளையில் ஆராய்வு

கண்டி நிருபர்

மாத்தளை கல்வி வலயத்திலுள்ள உக்குவலை குரிவெல ஹமீதியா முஸ்லிம் வித்தியாலயம் மற்றும் ராஜபக்ஷ நவோதயப் பாடசாலை என்பவற்றிற்கிடையே காணப்படும் பாடசாலைக் காணிப்பிரச்சினை தொடர்பாக கலந்துரையாடல் ஒன்று மாத்தளை செயலகத்தில் இடம்பெற்றது.

மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே தலைமையில் இடம்பெற்ற இக் கலந்துரையாடலில் மாகாணக் கல்வியமைச்சின் செயலாளர், இரு பாடசாலைகளினதும் அதிபர்கள் மற்றும் கல்வித் திணைக்கள அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.

ஆளுநரினால் ஏற்கனவே நேரடி விஜயம் ஒன்று மேற்கொள்ளப்பட்டு நிலைமைகள் நேரடியாக அவதானிக்கப்பட்டன. பின்னர் அது பற்றிய அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்கும்படியும் வேண்டியிருந்தார். இரு பாடசாலைகளையும் ஒன்றாக இணைப்பது தொடர்பாக இங்கு கருத்துகள் பரிமாறப்பட்டன.

# மலையகத்தில் தொடர்ச்சியாக அடைமழை ; பல இடங்களில் மண்சரிவு அபாயம்!

செ.திவாகரன் டி.சந்ரு

நுவரெலியா மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக நிலவி வரும் சீரற்ற வானிலையைத் தொடர்ந்து பல இடங்களில் மண்சரிவு அபாயம் ஏற்பட்டுள்ளது.

நேற்று (03) காலை நுவரெலியா - தலவாக்கலை பிரதான வீதியில் நானுஓயா கிளாரண்டன் பகுதியில் ஏற்பட்ட மண்சரிவு காரணமாக இவ்வீதியூடான போக்குவரத்து பாதிக்கப்பட்டு ஒருவழிப் போக்குவரத்தாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

தொடர்ச்சியாக பெய்துவரும் அடை மழை காரணமாக நுவரெலியா - தலவாக்கலை ஏ7 பிரதான வீதியில் பல இடங்களில் மண்சரிவு அபாயம் ஏற்பட்டு மண்திட்டுகள் சரிந்து வீழ்ந்துள்ளதுடன் கற்கள் புரளும் அபாயமும் காணப்படுவதனால் இவ்வீதியில் பயணிக்கும் வாகனங்கள் மற்றும் பாதசாரிகளை மிகுந்த அவதானத்துடன் பயணிக்குமாறு அறிவுறுத்தப்படுள்ளது.



நுவரெலியா மாவட்டத்தில் தொடர்ச்சியான சீரற்ற வானிலை காரணமாக அடிக்கடி கடும் பனி மூட்டம் நிறைந்து காணப்படுவதனால் பிரதான வீதிகளைப் பயன்படுத்தும் வாகனச் சாரதிகள் மிகவும் அவதானமாக தங்களது வாகனங்களைச் செலுத்தவேண்டுமென போக்குவரத்துப் பொலிஸார் கேட்டுக்கொண்டுள்ளனர்.

# இந்தியர்களைப் போல எம்முள்ளும் இலங்கையர் என்ற உணர்வு வேண்டும்

## சமதளத்தில் வடக்கையும் தெற்கையும் கொண்டுசெல்ல வேண்டுமென மக்களிடம் மைத்ரி வேண்டுகோள்





பல இன, மொழி, மதம் என்பவற்றைப் பின்பற்றுகின்ற மக்கள் வாழும் நாடாக இந்தியா உள்ளது. இருந்தபோதும், அவர்கள் இந்தியர்கள் என்ற ரீதியில் சகலரும் ஒன்றுபட்டே செயற்படுகின்றனர். அதேபோல, இலங்கையிலும் இலங்கையர் என்ற தேசிய உணர்வில் சகலரும் ஒன்றுபட வேண்டும் - என முன்னாள் ஜனாதிபதியும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தலைவருமான மைத்ரிபால சிறிசேன வேண்டுகோள் விடுத்தார்.

யாழ்ப்பாணத்திலுள்ள புத்திஜீவிகள், பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், மருத்துவர்கள் மற்றும் தொழில் வல்லுநர்கள் ஆகியோரை யாழில் உள்ள தனியார் விருந்தினர் விடுதியில் சந்தித்து கலந்துரையாடும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

''வடக்கையும் தெற்கையும் முப்பது வருடகால யுத்தம் பிரித்து வைத்திருந்தது. ஆனால், யுத்தம் நிறைவடைந்து பத்து வருடங்களுக்கும் மேலாகி விட்டன. இருந்தபோதும், எமக்குள் ஒற்றுமை என்பது இன்னும் இல்லை.

இந்தியாவில் பல இன, மொழி, மதம் என்பவற்றைப் பின்பற்றும் மக்கள் இருக்கிறார்கள். ஆனால், அவர்கள் மத்தியில் இந்தியர்கள் என்ற தேசிய உணர்வு இருக்கிறது. எனவே, இதற்கு இந்தியா நல்ல உதாரணமாகும்.

எமது நாடும் பல இன, மொழி, மதங்களைக் கொண்ட நாடு. ஆனால், எமது நாட்டில் இலங்கையர் என்ற ரீதியில் ஒற்றுமைப்பட முடியாமல் உள்ளது.

அதற்கு கடந்த கால கசப்பான அனுபவங்கள், ஆட்சியாளர்களின் கடும் போக்குச் சிந்தனைகளே காரணமாகவுள்ளன. நான் ஜனாதிபதியாகப் பதவியேற்ற காலத்தில் வடமாகாணத்துக்கு 21 தடவைகள் வருகை தந்துள்ளேன்.

நான் ஏன் அதிக தடவைகள் இங்கு வந்தேன் என்பதற்கு காரணம் இருக்கிறது. வடக்கையும் தெற்கையும் சமதளத்தில் கொண்டுசெல்ல வேண்டும் என்பதே எனது அவா.

வடக்கில் வாழும் மக்களின் அரசியல் அபிவிருத்தி, அன்றாட பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டு அனைவரும் இலங்கையர் என்ற ரீதியில் சம அந்தஸ்துள்ளவர்களாகப் பயணிக்க வேண்டும் என நான் விரும்பினேன்.

அதற்காக வடக்கு அபிவிருத்தி நிதியத்தை ஆரம்பித்து அதனூடாக பாரிய அபிவிருத்தித் திட்டங்களுக்கான நிதியை ஒதுக்கினேன். யாழ்ப்பாணத்தில் சர்வதேச விமான நிலையம், மயிலிட்டித் துறைமுகம் போன்ற அபிவிருத்திப் பணிகளை துரிதகதியில் செயற்படுத்தினோம்.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் தமது சொந்த வாழ்விடங்களுக்குச் செல்லமுடியாமல் அகதி முகாம்களில் தங்கியிருந்த நிலையில், எனது ஆட்சிக் காலத்திலேயே சுமார் 2,500 ஏக்கர் காணிகளை அவர்களுக்கென விடுவித்தேன்.

அதுமட்டுமல்லாது, தமிழ் மக்களின் அரசியல் தீர்வுக்காகன புதிய அரசியல் அமைப்பின் தேவை கருதி புதிய அரசியல் அமைப்பை உருவாக்குவதற்கான முயற்சிகளை ஆரம்பித்தேன். துரதிர்ஷ்ட வசமாக - ஆட்சி மாற்றம் காரணமாக பிரச்சி னையை முடிவுக்கு கொண்டுவர முடியவில்லை.

நான் வடக்கு மக்களை மறக்கவில்லை. அவர்களில் 80 வீதமானவர்கள் என்னை ஜனாதிபதிப் பதவிக்கு கொண்டுவருவதற்கு அர்ப்பணித்தவர்கள் என்பதை புத்திஜீவிகளான உங்கள் மத்தியில் கூறிக்கொள்வதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

புத்திஜீவிகள் ஆகிய உங்களிடம் நான் ஒன்றைக் கூற விரும்புகிறேன். எமது அயல் நாடான இந்தியாவிலும் பல்வேறு பிரச்சினைகள் உள்ள நிலையில், இந்தியர்கள் என்ற ரீதியில் அவர்கள் ஒற்றுமைப்படுவதைப் போல நாமும் இலங்கையர் என்ற ரீதியில் ஒற்றுமைப்படுவோமாயின் பல்வேறு பிரச்சினைகளில் நின்றும் விடுபட்டு அவற்றைத் தீர்த்துக்கொள்ள முடியும்''- என அவர் மேலும் தெரிவித்தார்.





ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் 19 ஆவது இலங்கை விமானப்படைத் தளபதியாக நியமிக்கப்பட்ட ஏயார் மார்ஷல் உதேனி ராஜபக்ஷ கடந்த முதலாம் திகதி உத்தியோகபூர்வமாக கடமையைப் பொறுப்பேற்றுக்கொண்டார். இந்நிகழ்வில் விமானப்படை அதிகாரிகள்,அவரது குடும்ப அங்கத்தவர்கள் ஆகியோரும் கலந்துகொண்டதைப் படத்தில் காணலாம்.

## கிளிநொச்சி ரோட்டரிக் கழகத்தால் மூன்று பாடசாலைச் செயற்றிட்டங்கள் கையளிப்பு





கிளிநொச்சி ரோட்டரிக் கழகத்தின் அனுசரணையில் காவேரி கலாமன்றத்தின் இரத்தினபுரி மாவட்டத்தில் மூன்று பாடசாலைகளுக்கான செயற்றிட்டங்கள் கையளிக்கப்பட்டன.

இதற்கிணங்க இரத்தினபுரி தமிழ் வித்தியாலயத்தில் திறன் வகுப்பறையும் இரத்தினபுரி சாந்த ஜோகிம் தமிழ் மகா வித்தியாலயத்தில் குடிநீர் செயற்றிட்டமும் நிவித்திகல தமிழ் வித்தியாலயத்தில் வெளி வகுப்பறை, திறன் வகுப்பறை என்பனவும் அமைக்கப்பட்டு கையளிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, இரத்தினபுரி,கேகாலை மாவட்டங்களில் 9 பாடசாலைகளில் 11 செயற்றிட்டங்கள் நடைமுறைப்படுத்தப் படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## நீராடச் சென்ற பாட்டனும் பேரனும் உயிரிழப்பு!

*ரஸீன் ரஸ்மின்*

புத்தளம் - நுரைச்சோலை இலந்தையடி கடற்கரையில் நீராடச் சென்ற இருவர் நேற்று முன்தினம் (02) இரவு உயிரிழந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளனர்.

மதுரங்குளி, ஹிதாயத் நகரைச் சேர்ந்த கச்சு முஹம்மது சஹீத் ( வயது 60) மற்றும் அஜ்வாத் சஹீர்கான் (வயது 22) ஆகிய ஒரே குடும்பத்தைச் சேர்ந்த பாட்டனும், பேரனுமே இவ்வாறு உயிரிழந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவர்கள் இருவரும் நேற்று முன்தினம் குடும்பஸ்தர்கள் சகிதம் நுரைச்சோலை, இலந்தையடி சவுக்குத் தோட்டத்துக்குச் சென்று அங்கு கடலில் நீராடுவதற்காகச் சென்ற நிலையில், நீரில் மூழ்கியுள்ளதாகத் தெரியவருகிறது. இது குறித்து மேலும் தெரியவருகையில், மேற்படி கடலில் நீராடிக் கொண்டிருந்தவர்களில் இரண்டு இளைஞர்கள் நீரில் மூழ்கியதை அவதானித்த அவர்களின் பாட்டன், இருவரையும் காப்பாற்றுவதற்கு முயற்சித்துள்ளார்.

இதன்போது, நீரில் மூழ்கிய இளைஞர்களில் ஒருவர் காப்பற்றப்பட்டுள்ளதுடன் மற்றைய இளைஞரும், பாட்டனுமே இவ்வாறு நீரில் சிக்குண்டு உயிரிழந்துள்ளனர்.

மேலும், நீரில் மூழ்கி காணாமல் போன மற்றைய இளைஞரை அங்கிருந்தவர்கள், நுரைச்சோலை பொலிஸார் மற்றும் மீனவர்கள் இணைந்து தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

எனினும், நீரில் மூழ்கி காணாமல் போன குறித்த இளைஞனின் ஜனாஸா இரண்டு மணித்தியாலங்களின் பின்னர் ஆலங்குடா கரையோரப் பகுதியில் மீட்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

சம்பவ இடத்திற்குச் சென்றிருந்த கற்பிட்டி பகுதிக்குப் பொறுப்பான திடீர் மரண விசாரணை அதிகாரி, விசாரணையை மேற்கொண்டதுடன், நுரைச்சோலைப் பொலிஸாரும் உறவினர்களிடம் வாக்குமூலத்தைப் பெற்றுக்கொண்டனர்.

இதனையடுத்து, குறித்த இரண்டு ஜனாஸாக்களும் புத்தளம் தள வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டன. இந்தச் சம்பவம் நுரைச்சோலை பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. சம்பவம் தொடர்பில் நுரைச்சோலை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## ஊடகவியலாளர்களை பொலிஸார் எதிர்த்ததால் கூட்டத்திலிருந்து கலைந்துசென்ற மக்கள்

### போதைப்பொருள் கட்டுப்பாடு தொடர்பாக பேராதெனிய கூட்டத்தில் சம்பவம்





*கலஹா செய்தியாளர்*

பேராதனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கல் ஓயா பிரதேசத்தில் பரவலாகக் காணப்படும் போதைப்பொருள் பயன்பாட்டைக் கட்டுப்படுத்தக் கோரி கல் ஓயா விகாரையில் முக்கிய கலந்துரையாடலொன்று நேற்று முன்தினம் (02) இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் பங்குபற்றுவதற்காகச் சென்றிருந்த ஊடகவியலாளர்களை அங்கிருந்து அனுப்புவதற்கு பொலிஸ் அதிகாரிகள் நடவடிக்கை எடுத்தனர்.

இதனால், ஆத்திரமடைந்த பொதுமக்கள் பொலிஸாரை விட ஊடகத்தின் மீதே தமக்கு நம்பிக்கை அதிகம் இருப்பதாகத் தெரிவித்து கோஷம் எழுப்பியுள்ளனர். சிறிது நேரம் கோஷம் எழுப்பிய மக்கள் பின்னர் அங்கிருந்து கலைந்து சென்றுள்ளனர்.

இதன்போது ''ஹெரோயின் விற்பனையாளர்களை முற்றாக இல்லாமலாக்குவதற்குப் பதிலாக ஊடகத்துறையினரை அடக்கியொடுக்க முயற்சிக்கும் பேராதனை பொலிஸ் அதிகாரிகள் எமக்குத் தேவையில்லை என்று தெரிவித்தும் அவர்கள் எங்களுக்கு வேண்டாம்'' - எனவும் கோஷங்களை எழுப்பினர்.

கம்பளை, கலஹா, கெலி ஓயா, நாவலப்பிட்டி, கினிகஸ்தேனை மற்றும் ஹட்டன் உள்ளிட்ட மலையகப் பிரதேசங்களுக்கு ஹெரோயின் போன்ற போதைப்பொருட்கள் நீண்டகாலமாக கல்ஓயா பிரதேசத்திலிருந்தே பகிர்ந்தளிக்கப்பட்டு வருவதாக பிரதேச வாசிகள் குற்றச்சாட்டு முன்வைத்திருந்தனர்.

பிரதேசவாசிகள் முகம் கொடுத்துவரும் இப்பிரச்சினைகளுக்குத் தீர்வு பெற்றுத்தருமாறுகோரி இறுதியாக கடந்த 25 ஆம் திகதி கல்ஓயா பிரதேசத்தில் சமயத் தலைவர்களின் தலைமையில் பொதுமக்கள் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டமொன்றையும் மேற்கொண்டிருந்தனர்.

இது தொடர்பாக நேற்று முன்தினம் (02) மாலை கல்ஓயா விகாரை மண்டபத்தில் விகாராதிபதி தலைமையில் முக்கிய கலந்துரையாடல் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மேற்படி கூட்டத்தில் கலந்துகொள்ள பேராதனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உட்பட அதிகாரிகள் குழு ஒன்று சென்றிருந்தது.

அதன்போது மண்டபத்தினுள்ளே ஊடகவியலாளர்கள் இருப்பதை அவதானித்த பொலிஸ் பொறுப்பதிகாரி ஜீப்புக்குள் இருந்தவாறே ஊடகவியலாளர்களை வெளியேற்றினால் மட்டுமே தான் மண்டபத்திற்குள் வருவதாகக் கூறியதையடுத்தே அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து பிரதேசவாசிகள் இவ்வாறு அங்கிருந்து கலைந்து சென்றமை குறிப்பிடத்தக்கது.



கதிர்காம விகாரையில் இடம்பெற்ற காவடியாட்டத்தின் போது............

## பசறையில் துப்பாக்கியுடன் ஒருவர் கைது!



பசறை ஆக்கரத்தனை பகுதியில் முகாமிட்டுள்ள விஷேட அதிரடிப் படையினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலையடுத்து பசறை வராலந்த, கொட்டமுதுன பகுதியில் சந்தேகத்திற்கிடமான இடத்தை சுற்றிவளைத்து தேடுதலை மேற்கொண்டுள்ளனர். அதன்போது, சூட்சுமமான முறையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த வெடிமருந்து நிரப்பப்பட்ட துப்பாக்கியொன்றை விஷேட அதிரடிப் படையினர் கைப்பற்றியதுடன் 52 வயதுடைய சந்தேக நபரொருவரையும் கைதுசெய்துள்ளனர்.

குறித்த சந்தேக நபரையும் துப்பாக்கியையும் பசறை பொலிஸ் நிலையத்தில் விஷேட அதிரடிப் படையினர் ஒப்படைத்துள்ளனர்.

குறித்த சந்தேக நபரிடம் பசறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி நு.ஆ.பியரட்ணவின் ஆலோசனைக்கமைய பசறை குற்றத்தடுப்புப் பொலிஸ் பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். இதனையடுத்து சந்தேக நபரை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக பசறை பொலிஸார் தெரிவித்தனர்.

## தையிட்டி விகாரைக்கு எதிரான இரண்டாம் நாள் தொடர் போராட்டம்



சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள காங்கேசன்துறை திஸ்ஸ விகாரைக்கு எதிரான தொடர் போராட்டமான மூன்றாம் கட்டப் போராட்டத்தின் இரண்டாவது நாள் போராட்டம் நேற்று (03) ஆரம்பமாகியது.

நேற்று போயா தினம் என்பதால் குறித்த விகாரையில் வழிபாடுகள் இடம்பெற்ற நிலையிலேயே குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. நேற்று முன்தினம் போராட்டம் ஆரம்பமாகியிருந்த நிலையில், அன்றிரவு போராட்டக்காரர்கள் போராட்டம் நடத்திய இடத்திலேயே நித்திரை கொண்டுள்ளனர். போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் பதாகைகளை ஏந்தி நின்றனர். போராட்டக்காரர்களுக்கு பலாலி பொலிஸார் பல்வேறு வகையிலும் அச்சுறுத்தலையும் இடர்களையும் ஏற்படுத்தி வருகின்றனர். இருப்பினும், போராட்டக்காரர்கள் கலைந்து செல்லாமல் போராட்டம் தொடர்கிறது.

இந்தப் போராட்டத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வராஜா கஜேந்திரன், கட்சியின் ஆதரவாளர்கள் மற்றும் பொது மக்கள் கலந்துகொண்டு தமது எதிர்ப்பை வெளிப்படுத்தி வருகின்றனர். அந்தவகையில், இந்தப் போராட்டத்திற்கு வலுச்சேர்ப்பதற்கு சமூக அக்கறையுள்ள அனைத்து அனைவரையும் அழைத்து நிற்கின்றனர் ஏற்பாட்டாளர்கள்.

## தமிழ் - சிங்கள இசை விருந்து

**வித்தியா சமூக அபிவிருத்தி நிறுவனமும் பொப் இசைப் பாடகர், இசை அமைப்பாளர், தயாரிப்பாளர், இயக்குநர் டென்மார்க் ஷானும் இணைந்து ஏற்பாடு செய்த தமிழ் - சிங்கள இசை நிகழ்ச்சி இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் முனிதாச கலையரங்கில் நடைபெற்றது. இந்நிகழ்வில் நம் நாட்டு பாடக பாடகிகள் கலந்துகொண்டு பாடல்களைப் பாடினார்கள். இலங்கையில் புகழ்பெற்ற சகோதர மொழி இசைக் குழுவினர் இசை வழங்கினர். நந்தகுமார் மாஸ்டர் குழுவினரின் நடனமும் அரங்கேற்றப்பட்டது.**

**படங்கள்:** *எம்.நசார்*







# மூதூர் தள வைத்தியசாலையில்

# தீவிர சிகிச்சைப் பிரிவு இன்மையால் நோயாளர்கள் அசௌகரியம்

## நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோரிக்கை

தோப்பூர் நிருபர்

மூதூர் தள வைத்தியசாலையில் தீவிர சிகிச்சைப் பிரிவு இன்மையால் இப்பிரதேச நோயாளர்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்குவதாக கவலை தெரிவிக்கின்றனர்.

மூதூர் தள வைத்தியசாலையில் மூதூர், தோப்பூர், சம்பூர், சேனையூர், மல்லிகை தங்குவது, பட்டித்திடல், கிளிவெட்டி, ஈச்சிலம்பற்று மற்றும் இலங்கைத் துறை போன்ற பிரதேசங்களைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான நோயாளர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்நிலையில் இப்பிரதேசத்தைச் சேர்ந்த நோயாளர்கள் உயிராபத்தை எதிர்நோக்கும் போது அதிதீவிர சிகிச்சைக்காக மிக தொலைவிலுள்ள திருகோணமலை பொது வைத்தியசாலை, மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை மற்றும் கிளிநொச்சி வைத்தியசாலை என்பவற்றுக்கு இடமாற்றப்படுகின்றனர்.

சில சமயங்களில் மேற்குறித்த வைத்திய சாலைகளில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் நோயாளர்கள் சிகிச்சை பெறுகின்றபோது இப்பிரதேச நோயாளர்கள் சிகிச்சை பெற முடியாமல் உயிரிழக்கும் அபாயத்தை எதிர்நோக்குவதாகவும் பிரதேச மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

நாடு சுதந்திரம் அடைந்ததிலிருந்து இற்றைவரை மூதூர் தொகுதியானது பாராளுமன்ற உறுப்பினரைப் பெற்றுக் கொள்ளத் தவறியதே இல்லை. அப்படியிருந்தும் மூதூர் தள வைத்தியசாலைக்கு தீவிர சிகிச்சைப் பிரிவை ஏற்படுத்த முடியாத துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

எனவே திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் மூதூர் தள வைத்தியசாலைக்கான தீவிர சிகிச்சைப் பிரிவை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு மூதூர் பிரதேச வைத்தியசாலையைப் பயன்படுத்தும் நோயாளர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# மூன்று வருடங்களுக்கு மேலாக பிரதான நீர்க் குழாயில் வெடிப்பு

## அதிகாரிகள் கண்டுகொள்வதில்லையென சுட்டிக்காட்டும் பிரதேச மக்கள்

கந்தளாய் செய்தியாளர்



தம்பலகாமம் நீர்ப்பாசன பொறியியலாளர் பிரிவுக்குட்பட்ட முள்ளிப்பொத்தானை கண்டி பிரதான வீதியில் பொருத்தப்பட்டுள்ள குடிநீர் விநியோகக் குழாய் வெடித்து நீர் வீண்விரயமாகுவதாக மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

முள்ளிப்பொத்தானை கண்டி பிரதான வீதி 95 ஆம் கட்டைக்கும் 96 ஆம் கட்டைக்கும் இடையில் பொருத்தப்பட்டுள்ள நீர் விநியோகக் குழாயே வெடித்து நீர் வெளியேறுகின்றது. இந்நிலைமை சுமார் மூன்று வருடங்களுக்கு மேலாக நீடிக்கின்றது. எனினும் இதுவிடயத்தில் அதிகாரிகள் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லையென பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இவ்விடயம் தொடர்பாக தம்பலகாமம் நீர்ப்பாசனத் திணைக்களத்துக்கு பல முறை அறிவித்துள்ளபோதிலும் அதிகாரிகள் வந்து பார்வையிட்டுவிட்டு மேலிடத்துக்கு அறிவிப்பதாக தெரிவித்துவிட்டு செல்வதாகவும் அப்பகுதி மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

எனவே மேற்படி குழாயை சீரமைப்பதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# கல்லடி விவேகானந்தா மகளிர் கல்லூரிக்கு கணனி இயந்திரங்கள்



களுதாவளை செய்தியாளர்

மட்டக்களப்பு, கல்லடி விவேகானந்தா மகளிர் கல்லூரிக்கு கணனி இயந்திரங்கள் கையளிக்கும் நிகழ்வு கல்லூரியில் இடம்பெற்றது.

கல்லடி விவேகானந்தா மகளிர் கல்லூரி மாணவர்களின் கணனி அறிவை மேம்படுத்தும் வகையில் அதிபரினால் விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கு இணங்க 2030 செயற்றிட்ட குழுவின் அனுசரணையில் விவேகா பழைய மாணவர் சங்கத்தின் ஊடாக அவுஸ்திரேலியாவின் ஐட் ரேன் நிறுவனம் மற்றும் சமாரியன் கரங்கள் அமைப்பினால் ஐந்து கணனி இயந்திரங்கள் வழங்கப்பட்டன.

கல்லூரி அதிபர் நவகீதா தர்மசீலன் தலைமையில் இடம்பெற்ற இதுதொடர்பான நிகழ்வில் சமாரியன் கரங்கள் அமைப்பின் இலங்கை நாட்டுக்கான பணிப்பாளர் ஹரிஷங்கர், 2030 செயற்றிட்ட குழுவின் ஒருங்கிணைப்பாளரும் விவேகா பழைய மாணவர் சங்க செயலாளருமான வைத்தியர் பிரமிளா சசிகுமாரன், பாடசாலையின் முன்னாள் அதிபரும் விவேகா பழைய மாணவர் சங்க ஆலோசகருமான இந்திராணி புஷ்பராஜா, விவேகா பழைய மாணவர் சங்கத்தின் உறுப்பினர்கள், கல்லூரி பிரதி அதிபர், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com






**ரஹுமத் பவுண்டேசன் அமைப்பினால் பாலமுனை தாருல் ஹஸனாத் வித்தியாலயத்துக்கு பொதுக்கிணறொன்று அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. இதனை வைபவ ரீதியாக திறந்து வைக்கும் நிகழ்வு பாடசாலை அதிபர் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் அமைப்பின் ஸ்தாபகர் ரஹுமத் மன்சூர் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.**

**படப்பிடிப்பு:** கோணாவத்தை செய்தியாளர்





மட்டக்களப்பு, வந்தாறுமூலை அருள்மிகு ஸ்ரீதேவி பூமிதேவி சமேத ஸ்ரீ மகா விஷ்ணு தேவஸ்தான வருடாந்த தீ மிதிப்பும் தீர்த்தோற்சவமும் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்றது.

**படங்கள்:** மட்டக்களப்பு நிருபர்

# மட்டு.வில் தொழில் வழிகாட்டல் பயிற்சி



களுதாவளை செய்தியாளர்

மட்டக்களப்பு, மண்முனை வடக்கு பிரதேச செயலகப் பிரிவில் தெரிவுசெய்யப்பட்ட இளைஞர் யுதிகளுக்கான தொழில் வழிகாட்டல் ஒருநாள் பயிற்சி கருத்தரங்கு ஞாயிற்றுக்கிழமை (02) மட்டக்களப்பு சாள்ஸ் மண்டபத்தில் இடம்பெற்றது.கரீதாஸ் எகெட் நிறுவன சமாதான செயற்றிட்ட இணைப்பாளர் ரெபின்சனின் ஒருங்கிணைப்பில் நிறுவன இயக்குநர் அருட்தந்தை ஜேசுதாசன் அடிகளார் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் நூற்றுக்கணக்கான இளைஞர் யுவதிகள் கலந்துகொண்டனர். இக்கருத்தரங்கில் மனித வள அபிவிருத்தி மற்றும் தொழில் வழிகாட்டல் ஆலோசகர்களான அருளம்பலம் கருணாகரன், கருணாநிதி தீசன், நிதர்சனி விஜயகுமார் ஆகியோர் வளவாளர்களாகக் கலந்து கொண்டனர்.

# அல்லைக்குளத்தில் நீர்வற்றியுள்ளதால் நெற்செய்கை பாதிப்பு; விவசாயிகள் கவலை



மூதூர் நிருபர்

தோப்பூர் , அல்லைக்குளத்தில் நீர்வற்றியுள்ளதால் நெற்செய்கை பாதிப்படைந்துள்ளதாக தோப்பூர் விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

தோப்பூர், அல்லைக்குளத்தை நம்பி அல்லைக்குள வெளி, கிரான்வெளி, ஆலயக்குடா, கன்னான்வெளி உள்ளிட்ட சுமார் 275 ஏக்கர் நிலப்பரப்பில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்நிலையில் தற்போது நிலவும் கடும் வரட்சி காரணமாக அல்லைக்குளத்தில் நீர் வற்றியுள்ளது. இதனால் மேற்குறித்த பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட நெற்செய் கைகள் நீரின்றி பாதிப்படைந்துள்ளன.

நாங்கள் கஷ்டபட்ட ஏழைகள். கடன்பெற்றே நெற்செய்கை மேற்கொள் கின்றோம். இந்நிலையில் பாசன வசதியைப் பெற்று வரும் குளத்தில் நீர் வற்றியுள்ளது. நெற்செய்கை தற்போது குடலைப் பருவத்தை அடைந்துள்ளதால் நீரின் தேவை மிகவும் இன்றியமையாததாகும்.

இந்நிலை தொடர்ந்தால் நாங்கள் உயிரை மாய்த்துக் கொள்ள வேண்டிய நிலைமையே ஏற்படும்.நாங்கள் முகம் கொடுத்து வரும் பிரச்சினைகளை யாரும் ஆராய்ந்து பார்ப்பதில்லை.

எனவே தோப்பூர், அல்லைக்குளத்தை புனரமைத்து நீர்ப்பாசன வசதிகளை ஏற்படுத்துவதற்கு சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென தோப்பூர் பகுதி விவசாயிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# மட்டக்களப்பில் கல்விக் கண்காட்சி







கல்லடி செய்தியாளர்

பாடசாலை மட்டத்தில் மாணவர்களின் வரலாறு பாடம் தொடர்பான கற்றலைத் தூண்டவும் வரலாற்றினை எவ்வாறு தமது வாழ்வோடு இணைந்து, தொடர்புபடுத்திக் கற்க, கற்பிக்க முடியும் என்ற நுட்பத்தை உள்வாங்கிக் கொள்ளும் நோக்கோடு மாகாண கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன், மட்டக்கள்பு வலயக் கல்வி அலுவலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டு, வலயங்களுக்கிடையே நடத்தப்பட்ட மாவட்ட மட்ட "வரலாறு வாழ்வோடு இணைந்ததாக" எனும் தொனிப் பொருளிலான வரலாறு பாட கண்காட்சி மட்டக்களப்பு மகஜனாக் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் வெள்ளிக்கிழமை (30) இடம்பெற்றது.

இந்நிகழ்வில், மட்டக்களப்புக் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் தேவரஜனி உதயகரன், மாகாணக் கல்விப் பணிமனையின் சமூக விஞ்ஞான பாடத்துக்குப் பொறுப்பான உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ். பார்த்தீபன், மட்டக்களப்பு வலயக் கல்வி அலுவலக சமூக விஞ்ஞான பாட ஆசிரிய ஆலோசகர் ரி. குருபரன், மட்டக்களப்பு மேற்கு கல்வி வலய சமூக விஞ்ஞான பாடத்துக்குப் பொறுப்பான உதவிக் கல்விப் பணிப்பாளர் கே. ரகுகரன், ஆசிரிய ஆலோசகர் கே. மகேந்திரன்,பட்டிருப்பு வலயக் கல்வி அலுவலக சமூக விஞ்ஞான பாடத்துக்குப் பொறுப்பான உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ். சுரேஸ்குமார், ஆசிரிய ஆலோசகர் ஆர். கருணா, கல்குடா கல்வி வலய சமூக விஞ்ஞான பாட ஆசிரிய ஆலோசகர் ரி. அகிலன், மட்டக்களப்பு மத்தி வலயக் கல்வி அலுவல சமூக விஞ்ஞான பாடத்துக்குப் பொறுப்பான உதவிக் கல்வி பணிப்பாளர் ஏ.ஜி.எம்.ஹக்கீம்,ஆசிரிய ஆலோசகர் ரபியுதீன், கல்லூரி அதிபர் எஸ். சாந்தகுமார், ஏறாவூர் பற்று - 1 கோட்டக் கல்விப் பணிப்பாளர் ரி. ராஜமோகன், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது மாணவர்களால் தயாரிக்கப்பட்ட வரலாறு பாடம் சம்பந்தமான பல்வேறு உபகரணங்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன குறிப்பிடத்தக்கது.

# பழைய மாணவர்களை மீண்டும் பாடசாலைக்கு அழைத்தல்

## காத்தான்குடி மீரா மகளிர் கல்லூரியில் விசேட நிகழ்வு

களுதாவளை செய்தியாளர்

காத்தான்குடி மீரா மகளிர் தேசிய பாடசாலையின் பழைய மாணவர்களை மீண்டும் பாடசாலைக்கு அழைத்தல் (Once again Balika) நிகழ்வு இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பாடசாலை அதிபர் அஷ்ஷெய்க் யூ.ஏ.மன்சூர, முன்னாள் அதிபர் இஸ்மா

மாணவிகள் வகுப்பறைகளுக்குச் சென்று பழைய நினைவுகளை மீட்டதுடன் கற்பித்த ஆசிரியர்களையும் சந்தித்தனர்.






கடந்த சனிக்கிழமை (01) இடம்பெற்றது.

பாடசாலை பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்தநிகழ்வில் பேரணி, காலைக் கூட்டம்,உடற்பயிற்சி, கலை நிகழ்வுகள் என்பன இடம்பெற்றன.

இதற்கிணங்க பாடசாலை முன்பாக பஸ்மலா சதுக்கத்தில் ஆரம்பமாகிய பேரணியானது பிரதான வீதி வழியாக சென்று மீண்டும் பாடசாலையை வந்தடைந்ததும் காலைக் கூட்டம் ஓய்வு பெற்ற முன்னாள் பிரதிக் கல்விப் பணிப்பாளர் எம்.எம்.இஸ்மாலெவ்வை தலைமையில்

லெவ்வை, பாடசாலை பழைய மாணவர் சங்கச் செயலாளர் முபீதா, பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், பழைய மாணவர் சங்க பிரதிநிதிகள், பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் பழைய மாணவிகள் எனப்பலர் கலந்து கொண்டனர்.

இதனையடுத்து பாடசாலை பிரதான மண்டபத்தில் அதிபர் அஷ்ஷெய்க் யூ.ஏ.மன்சூர் தலைமையில் ஒன்றுகூடல் நிகழ்வு இடம் பெற்றதுடன் கௌரவிப்பு நிகழ்வும் நடைபெற்றது.இதனையடுத்து பழைய



இதனையடுத்து பிரதான ஒன்று கூடல் மண்டபத்தில் பழைய மாணவர்களின் கலை கலாசார நிகழ்வுகளும் இடம்பெற்றன.

# சுற்றுலாத்துறை சங்கத்துக்கு களங்கம் ஏற்படுத்தியவருக்கு சட்ட நடவடிக்கை இல்லை

## கவலையளிக்கிறது என்கிறார் சங்கத்தின் தலைவர் முபீன்

கிண்ணியா நிருபர்

திருகோணமலை, நிலாவெளி கரையோரம் தொடக்கம் புறாத்தீவு வரை சுமார் 20 வருடங்களாக படகுச் சேவையை முன்னெடுத்துவரும் எமது சங்கத்துக்கெதிராக இட்டுக்கட்டப்பட்ட போலி வீடியோவை சமூக வலைத்தளத்தில் பரப்பி சங்கத்துக்கு களங்கம் ஏற்படுத்தியவர் மீது எந்தவித சட்ட நடவடிக்கையும் எடுக்காதிருப்பது கவலையளிக்கிறது என நிலாவெளி சுற்றுலாப் பிரயாணிகளின் படகு மற்றும் சேவைக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் எஸ்.எம்.முபீன் தெரிவித்தார்.

திருகோணமலையில் நேற்று (03)இடம் பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளை மிகவும் அன்பாகவும் - பண்பாகவும் வழிநடத்தி எங்களது தொழிலை முன்னெடுத்து வரும் நிலையில், வனஜீவராசித் திணைக்கள முன்னாள் அதிகாரி ஒருவர் தனது மனைவியின் பெயரில் அனுமதிப்பத்திரமொன்றை வைத்துக்கொண்டு படகுச் சேவையை முன்னெடுப்பதுடன் தங்களுக்கெதிராக போலியான இட்டுக்கட்டப்பட்ட வீடியோவை சமூக வலைத்தளங்களில் பதிவேற்றி அபகீர்த்தியை ஏற்படுத்தியுள்ளார். இதனை வன்மையாகக் கண்டிப்பதுடன் இது தொடர்பில் குச்சவெளி பொலிஸ்,பிரதேச செயலகம்,வனஜீவராசி திணைக்களம், மாவட்ட செயலாளர் உள்ளிட்டவர்களுக்கும் முறைப்பாடுகளைப் பதிவு செய்து கோரிக்கை முன்வைக்கப்பட்ட போதிலும் எவ்வித நடவடிக்கையையும் இற்றைவரைக்கும் எடுக்காதிருப்பது கவலையளிப்பதுடன் பெரும் சந்தேகத்தையும் ஏற்படுத்துகிறது.



சுற்றுலாப் பயணிகளுக்கான படகுச் சேவையே 20 வருட காலமாக எங்களது வாழ்வாதாரமாகும். இதன் மூலமாக 150 குடும்பங்கள் வாழ்கின்றன. இவ்வாறான நிலையில், இட்டுக்கட்டப்பட்ட போலியான வீடியோவை சமூக வலைத்தளத்தில் பரப்பி தங்களது சங்கத்துக்கு களங்கத்தை ஏற்படுத்தி தொழிலை நாசமாக்க முனைகின்றனர். இந்தப் பிரச்சினை மூன்று மாத காலமாகத் தொடர்கின்ற போதிலும், அதற்கான எவ்வித தீர்வும் இதுவரை எட்டப்படவில்லை. தீர்வின்றிப் போனால் அனைவரும் ஒன்றுபட்டு பாரிய ஆர்ப்பாட்டத்தை முன்னெடுக்க வேண்டி ஏற்படும். இது தொடர்பில் உரிய அதிகாரிகள் கவனஞ்செலுத்தி நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுக்கின்றேன் என்றார்.

# ஹிறாநகர் பிரதான வீதியை புனரமைக்குமாறு கோரிக்கை

பாலமுனை செய்தியாளர்



பாலமுனை, ஹிறாநகர் மீள் குடியேற்றக் கிராமத்துக்குச் செல்லும் பிரதான வீதி நீண்டகாலமாகப் புனரமைக்கப்படாது சேதமடைந்து காணப்படுகின்றது.

இதனால் இவ்வீதியூடாக போக்குவரத்துச் செய்யும் மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம்கொடுப்பதாக அப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

பாலமுனை பிரதான வீதியிலிருந்து ஐந்து கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்துள்ள இக்கிராமத்தில் சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றன. இப்பகுதி வாழ் மக்கள் மேற்குறித்த வீதியையே பல்வேறு அசௌகரியங்களுக்கு மத்தியிலும் போக்குவரத்துக்குப் பயன்படுத்தி வருகின்றனர்.

இவ்வீதியை புனரமைக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மற்றும் பிரதேச அரசியல்வாதிகள் ஆகியோரிடம் பலமுறை கோரிக்கை விடுத்த போதும் வீதியை புனரமைப்பதற்கான எவ்வித நடவடிக்கையும் இதுவரை முன்னெடுக்கப்படவில்லையென மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

எனவே, இவ்வீதியைப் புனரமைப்பதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மற்றும் பிரதேச அரசியல்வாதிகள் நடவடிக்கை எடுக்கவேண்டுமென மீண்டும் வலியுறுத்துகின்றனர்.

# துப்பாக்கிச் சூடு; இருவர் படுகாயம்

## குச்சவெளி பொலிஸ் பிரிவில் சம்பவம்

அப்துல்சலாம் யாசீம்

குச்சவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் இருவர் படுகாயமடைந்து திருகோணமலை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். இச்சம்பவம் நேற்று (03) அதிகாலை இடம்பெற்றுள்ளது.

குச்சவெளி- வடலிக்குளம் பகுதியைச் சேர்ந்த ஏ.அஸ்மி (17வயது), ஐ.அஸ்கான் (21வயது) ஆகிய இருவருமே மேற்படி துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் காயமடைந்துள்ளதாகத் தெரியவருகின்றது.

மோட்டார் சைக்கிளில் இருவரும் பயணித்துக் கொண்டிருந்தபோதே இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் குச்சவெளி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# காரைதீவு ஸ்ரீமன் நாராயணன் ஆலய மஹா கும்பாபிஷேகம்

காரைதீவு நிருபர்

காரைதீவு அருள்மிகு ஸ்ரீதேவி பூமிதேவி சமேத ஸ்ரீமன் நாராயணன் தேவஸ்தான புனராவர்த்தன நவகுண்ட மஹா அஷ்டபந்தன கும்பாபிஷேக குடமுழுக்குப் பெருவிழா எதிர்வரும் 09 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளது.

இதற்கிணங்க கும்பாபிஷேகப் பெருவிழா கிரியைகள் எதிர்வரும் 07ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 6மணிமுதல் கர்மாரம்பம் விநாயகர் வழிபாடு, கங்காதேவி பூஜை,ஆதித்யாக்கினி சங்கிரணம்,நூதன மூர்த்திகள் பூஜைகள் 3.00மணி வரை இடம்பெற்று மறுநாள் சனிக்கிழமை காலை புண்ணியாக வாசனம், யாக பூஜை விஷேட திரவிய ஹோமம் சகஸ்ரநாம ஹோமம். பிரசாத கிரியைகள் ஆரம்பமாகி 07.00 மணி முதல் எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வு ஆரம்பித்து பிற்பகல் 5.00 மணி வரை இடம்பெறும். மறுநாள் ஞாயிற்றுக்கிழமை 09ஆம் திகதி காலை 8.50 முதல் 10.28 வரையிலான சுபவேளையில் மகாகும்பாபிஷேகப் பூசைகள் இடம்பெறும்.

# போடியார் புலம்பல்!



***குத்து விளக்கில கூட்டாக வந்த ஜனநாய கூட்டணி தம்பிமார வீட்டில போட்டியிடுற தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு என பெயர மாத்தக்கூடாதாம் எண்டு தேர்தல் திணைக்களம் முந்தநாள் எழுத்துமூலமாக தடைபோட்டுத்தாங்க எலுவா?***

***அப்ப TNA என்ட பெயர கொப்பியடிச்சு குடும்பம் நடத்திற ரெலோ, புளட்,ஈபீஆர்எல்எவ் இனி D ஐ மறைக்காம DTNA எண்டு போடவேண்டியதுதான்... இப்ப விளங்கிதா ஆருக்கோ பொறந்த புள்ளய கண்டவன் நின்னவன் எல்லாம் பதிவு வைக்க ஏலாது எண்டத. புள்ளயான் புலிகளிட பேர கொப்பியடிச்ச மாதிரி இவங்க கூட்டமைப்ப கொப்பியடிச்சும் சரிவரல்ல...***

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# கங்கத்தலாவ ஐக்கிய ஊடகவியலாளர் ஒன்றியத்தின் 2 ஆவது ஆண்டு விழா

கந்தளாய் செய்தியாளர்

திருகோணமலை மாவட்ட கங்கத்தலாவ ஐக்கிய ஊடகவியலாளர் ஒன்றியத்தின் 02ஆவது ஆண்டு நிறைவு விழா சேருவில மாவிலாறு அணைக்கட்டில் கிழக்கு மாகாண சபையின் பிரதம செயலாளர் ஆர்.எம்.பி.எஸ்.ரத்நாயக்க தலைமையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் "இளைஞர் அபிவிருத்தி அஹம்" மாவட்ட இணைப்பாளர் சிரேஷ்ட ஊடகவியலாளர் பொன்னத்துரை சச்சிதானந்தம் கலந்து கொண்டார்.

இதன்போது திருகோணமலை மாவட்ட கங்கத்தலாவ ஐக்கிய ஊடகவியலாளர் ஒன்றியத்தின் ரீசேட்டுகளும் அறிமுகப்படுத்தப் பட்டன.



# இருதயநாதர் ஆலய வருடாந்த திருவிழா

பாண்டிருப்பு நிருபர்

கல்முனை திரு இருதய நாதர் ஆலய வருடாந்த திருவிழா அருட்தந்தை வண. ஏ.தேவதாசன் அடிகளாரின் தலைமையில் நடைபெற்றது .





இதன்போது அருட் தந்தை அன்னதாஸ் அடிகளார் திருப்பலியை தலைமை தாங்கி ஒப்புக் கொடுத்திருந்தார். இவ்வருட ஆலய திருவிழாவானது மிகச் சிறப்பாக நடைபெற்றிருந்தது.

இதன்போது பல ஆண்டுகளாக கல்முனை திரு அவையில் மறை ஆசிரியர்களாகப் பணியாற்றி ஓய்வுபெறும் ரெஜினா டிலைல் மற்றும் ரோஸ்மேரி ஆகியோர் பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.

# உள்ளூராட்சி மன்றங்களின் சேவைகளை நவீனமயமாக்கும் செயற்றிட்டம்

நூருல் ஹுதா உமர்

கனேடிய உதவியின் கீழ் இலங்கை உள்ளூராட்சி மன்றங்களின் சம்மேளனத்தினால் அமுல்படுத்தப்படுகின்ற "உள்ளூர் பெண் தலைமைத்துவத்தை வலுவூட்டுவதன் ஊடாக உள்ளூராட்சி மன்றங்களின் சேவைகளை நவீனமயமாக்கும் செயற்றிட்டம்" சேவை பகுப்பாய்வுக் கருவி தயார்ப்படுத்துவதற்கு பொருத்தமான பயிற்சிநெறி கோரளைப்பற்று பிரதேச சபைச் செயலாளர் எஸ். நவநீதன் தலைமையில் பிரதேச சபை மண்டபத்தில் இடம்பெற்றது.

இலங்கை உள்ளூராட்சி மன்றங்கள் சம்மேளனமும் கனேடிய உள்ளூராட்சி மன்றங்கள் சம்மேளனமும் கோறளைப்பற்று பிரதேச சபையுடன் இணைந்து ஆரம்பிக்கப்படவுள்ள ஆறு வருட செயற்றிட்டம் தொடர்பில்சேவை பகுப்பாய்வுக்கருவி உருவாக்கப்படல் தொடர்பில் இங்கு ஆராயப்பட்டது.

குடிமக்களின் கருத்துகளின் அடிப்படையில் வழங்கப்படும் பொதுச் சேவைகளை பகுப்பாய்வு செய்ய இந்த சேவை பகுப்பாய்வுக்கருவி பயன்படுத்தப்படும் என்றும் பாலின சமத்துவத்தைப் பாதுகாப்பதும் அதிகார வரம்பின் அனைத்து குடிமக்களுக்கும் சமமான முறையில் சேவைகள் கிடைப்பதை உறுதி செய்வதுமே இதன் முக்கிய நோக்கமாக அமையவுள்ளதாக இங்கு சுட்டிக்காட்டப்பட்டது.

கனேடிய தேசிய வளவாளர்கள் இந்த சேவை பகுப்பாய்வுக்கருவி குறித்து எதிர்காலத்தில் பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்தை ஏற்பாடு செய்யவுள்ளதுடன் மேலும் அதை கோறளைப் பற்றுபிரதேச சபைக்கேற்ப மாற்றியமைப்பதற்குத் தேவையான தொழில்நுட்ப அறிவை வழங்குவது தொடர்பிலும் இங்கு ஆராயப்பட்டது.

இந்நிகழ்வில் இலங்கை உள்ளூராட்சி மன்றங்கள் சம்மேளன பிரதம நிறைவேற்று அதிகாரி ஹேமந்தி குணசேகர, இலங்கை உள்ளூராட்சி மன்றங்கள் சம்மேளன சிரேஷ்ட நிகழ்ச்சித்திட்ட முகாமையாளர் பீ. பிரதீப், உள்ளூராட்சி மன்றங்களின் நிகழ்ச்சித் திட்ட உத்தியோகத்தர் எம்.ஐ.எம். வலீத், கோரளைப்பற்று பிரதேச சபை உத்தியோகத்தர்கள், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், சமூக பொதுநிறுவன நிர்வாகிகள் உட்பட்ட பலர் கலந்துகொண்டனர்.







# வாழைச்சேனையில் கௌரவிப்பு விழா

கல்குடா நிருபர்

வாழைச்சேனை அல் -அக்ஸா நற்பணி மன்றம் நடத்திய பிரதேசத்தின் முன்னோடிகள் ஐம்பது பேரைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் ஞாயிற்றக்கிழமை மாலை வாழைச்சேனை வை.அஹமட் வித்தியாலய பிரதான மண்டபத்தில் இடம்பெற்றது.

மன்றத்தின் தலைவரும் ஜயந்தியாய அஹமட் ஹிராஸ் வித்தியாலயத்தின் அதிபருமான எம்.ஐ. செயினுலாப்தீன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் மௌலவி ரீ.எல்.அஹமட் (அஸ்ஹரி), வைத்திய நிபுணர் எஸ்.அஹமட் பரீட் மற்றும் பிரதேச பாடசாலைகளின் அதிபர்கள் அதிதிகளாகக் கலந்துகொண்டனர்.

பிரதேசத்தின் அரச மற்றும் அரச சார்பற்ற துறைகளில் கடமையாற்றி ஓய்வுபெற்ற சமூக முன்னோடிகள், பிரதேசத்தின் முன்னேற்றத்துக்காகத் தங்களைத் தியாகம் செய்தவர்கள் என ஐம்பது பேர் நற்பணி மன்றத்தினால் இதன்போது பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.









# இஸ்ரேல் இராணுவத் தாக்குதல்: பலஸ்தீனர்கள் 9 பேர் உயிரிழப்பு



பலஸ்தீனத்தின் மேற்குக்கரைப் பகுதியில் இஸ்ரேல் இராணுவம் நடத்திய தாக்குதலில் 9 பேர் கொல்லப்பட்டுள்ளதுடன் பலர் காயமடைந்தனர். இதனால் அங்கு பதற்றம் நிலவுகிறது.

மேற்குக்கரைப் பகுதியிலுள்ள ஜெனின் அகதிகள் முகாமில் இஸ்ரேல் இராணுவத்தினர் வான்வழித் தாக்குதலை நடத்தினர். நள்ளிரவில் நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலில் 9 பலஸ்தீனர்கள் (பத்திரிகை அச்சுக்குச் செல்லும் வரை) கொல்லப்பட்டுள்ளதுடன் பலர் காயமடைந்தனர்.

மேற்குக் கரையில் நேற்று (03) காலை இஸ்ரேல் இராணுவம் சுமார் பத்துத்தடவைகள் தாக்குதல் நடத்தியதாக பலஸ்தீன அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இந்தத் தாக்குதலில் பலஸ்தீனர்களின் ஏராளமான வீடுகள் சேதமடைந்துள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

தாக்குதல் குறித்து பாலஸ்தீன வெளியுறவுத் துறை அமைச்சகம் வெளியிட்ட அறிவிப்பில், “இஸ்ரேலின் காட்டுமிராண்டித்தனமான தாக்குதலை நாங்கள் கடுமையாகக் கண்டிக்கிறோம். அவர்கள் ஆயுதம் ஏந்தாத அப்பாவி மக்களைத் தாக்குகிறார்கள்; அம்பியூலன்ஸ்களைத் தாக்குகிறார்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இத்தாக்குதல் தொடர்பாக இஸ்ரேல் தரப்பில் இதுவரை பதிலளிக்கப்படவில்லை.

பலஸ்தீனத்தின் மேற்கு கரையிலுள்ள ஜெனின் அகதிகள் முகாமில் தீவிரவாதிகள் இருப்பதாகக் கூறி இஸ்ரேல் இராணுவம் நடத்திய இந்தத் தாக்குதலுக்கு சர்வதேச மனித உரிமை அமைப்புகள் கண்டனம் தெரிவித்துள்ளன.

கடந்த ஆண்டு மார்ச் மாதம் ஜெருசலேமில் அல்-அக்ஸா பள்ளிவாசலில் பலஸ்தீனர்களுக்கும் இஸ்ரேல் பாதுகாப்புப் படையினருக்குமிடையே மோதல் ஏற்பட்டது. இதில் இஸ்ரேல் படையினர் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் பலர் காயமடைந்த நிலையில் சிறுவன் ஒருவர் உயிரிழந்தார். இதனைத் தொடர்ந்து இஸ்ரேல் - பலஸ்தீனமிடையே மீண்டும் மோதல் பூதாகரமானது.

அமெரிக்காவும் ஐக்கிய நாடுகள் சபையும் தலையிட்டு இரு நாடுகளும் அமைதிகாக்க வலியுறுத்தின. இந்த நிலையில், மீண்டும் இஸ்ரேல் தாக்குதல் நடத்தியுள்ளது.



# கட்டுக்கடங்காத பிரான்ஸ் கலவரம்: அண்டை நாடுகளில் பரவுவதால் பதற்றம்

## நெருக்கடிக்குள் மெக்ரோன்




உலக செய்திகள்

பிரான்ஸில் இன்று 7ஆவது நாளாகவும் வன்முறைகள் தொடர்ந்து இடம்பெற்று ஒருவருடன் கலவரத்தில் ஈடுபட்ட 2,500இற்கும் மேற்பட்டோர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். மேலும் பிரான்ஸில் ஏற்பட்டுள்ள கலவரங்கள் அண்டை நாடுகளில் பரவிவருவதால் பதற்றம் அதிகரித்துள்ளது. தொடரும் வன்முறைகளால் பிரான்ஸ் பற்றியெரிவதால் அந்நாட்டு ஜனாதிபதி இம்மானுவேல் மெக்ரோனுக்கு நெருக்கடி அதிகரித்துள்ளது.

இதேவேளை, பாரிஸின் தென் பகுதியிலிருக்கும் ஹே லெஸ் ரோஸஸ் டவுனின் மேயர் வின்செண்ட் ஜேன்ப்ரனின் வீட்டை சனிக்கிழமை (01) சுற்றி வளைத்த வன்முறையாளர்கள் வீட்டின் மீது தீப்பற்றி எரியும் காரைக்கொண்டு மோதித் தாக்குதல் நடத்தினர். இதில் மேயரின் மனைவியும் குழந்தையும் காயமடைந்தனர். இந்தச் சம்பவம் தொடர்பாக கொலை முயற்சி வழக்குப் பதிவுசெய்து பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

வட ஆபிரிக்க வம்சாவளியைச் சேர்ந்தவரும், அல்ஜீரியாவிலிருந்து புலம்பெயர்ந்தவருமான நஹேல் என்ற 17 வயதுச் சிறுவனின் குடும்பம் பாரிஸில் வசித்து வருகிறது. பாரிஸின் புறநகர்ப் பகுதியில் கடந்த செவ்வாயன்று போக்குவரத்து வாகனச் சோதனையின்போது காரை நிறுத்தாமல் சென்றதாகத் தெரிவித்து நஹேல் பொலிஸாரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இஸ்லாமியரைப் போல உள்ளதால் அந்தச் சிறுவன் கொல்லப்பட்டதாக செய்திகள் பரவியதைத் தொடர்ந்து பிரான்ஸின் பல பகுதிகளில் வன்முறை வெடித்தது. ஐந்து நாட்களாக நீடித்த கலவரத்தில் பாரிஸ், மார்ஷேலே, லியான் உட்பட பல பகுதிகளில் பஸ்கள், கார்கள் தீ வைத்து எரிக்கப்பட்டன.

இந்நிலையில், போராட்டம் நடத்த நாடு முழுவதும் தடை விதிக்கப்பட்டுள்ளது. மாலையில் பொதுப் போக்குவரத்திற்கு தடை செய்யப்பட்டது. இரவு நேர ஊடங்கு அமுல்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த 6 நாட்களுக்கும் மேலாக நடந்த கலவரத்தில் 2 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வாகனங்களுக்குத் தீ வைக்கப்பட்டது. 700இற்கும் மேற்பட்ட கடைகள், வங்கிகள், பல்பொருள் சந்தைகள், அரச கட்டடங்கள் மற்றும் வணிக வளாகங்கள் என்பன சூறையாடப்பட்டுள்ளன.

பிரான்ஸில் இடம்பெற்றுவரும் இந்த வன்முறையால் அந்நாட்டு ஜனாதிபதி இம்மானுவெல் மெக்ரோனுக்கு கடும் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது. இதனையடுத்து ஜேர்மனிக்கான பயணத்தை அவர் ரத்துச் செய்துள்ளார். இந்தாண்டில் மெக்ரோன் ரத்துச் செய்யும் 2ஆவது வெளிநாட்டுப் பயணம் இதுவாகும்.

இந்நிலையில், கட்டுக்கடங்காமல் பரவிவரும் கலவரத்தைக் கட்டுப்படுத்த நாடு முழுவதும் 45ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொலிஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இந்நிலையில், பிரான்ஸ் முழுவதும் நேற்றுமுன்தினம் வன்முறையில் ஈடுபட்ட மேலும் 720 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இதுவரை 2,800 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். கைதுசெய்யப்பட்டோரில் 30 சதவீதமானோர் 18 வயதுக்குட்டோர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, பிரான்ஸில் பல இடங்களில் பதற்றம் தணிந்துள்ளதாக அந்நாட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

**அண்டை நாடுகளுக்குப் பரவிய கலவரம்**

இந்நிலையில், பிரான்ஸின் அண்டை நாடான சுவிட்சர்லாந்தில் சிறுவனொருவன் துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகியுள்ளான். இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து அந்நாட்டு மக்கள் போராட்டங்களில் இறங்கியுள்ளனர்.

பிரெஞ்சு மொழி பேசுபவர்கள் அதிகம் வாழும் லாவ்சேன் நகரில் முக்கிய வீதிகளில் திரண்ட 100இற்கும் மேற்பட்டோர் அங்கிருந்த கடைகளின் ஜன்னல்கள், கதவுகளை அடித்து நொருக்கியுள்ளனர்.

இது குறித்து முறைப்பாடளிக்கப்பட்டதைத் தொடர்ந்து ஏழு பேர் கைதுசெய்யப்பட்டனர்.

இதேபோன்று பெல்ஜியம் தலைநகர் பிரெஸ்ஸெல்ஸில் வன்முறையில் ஈடுபட முயன்ற 10இற்கும் மேற்பட்டோரை அந்நாட்டுப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

ஐரோப்பிய ஒன்றிய கூட்டத்தில் பங்கேற்க வெளிநாடு சென்றிருந்த ஜனாதிபதி இம்மானுவெல் மெக்ரோன், அவசரமாக நாடு திரும்பி கலவரத்தைக் கட்டுப்படுத்துவது குறித்து அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார்.

இதற்கிடையே, விருந்து நிகழ்ச்சியொன்றில் அவர் பங்கேற்று நடனமாடியதற்கு எதிர்ப்பு எழுந்துள்ளது. பதற்றமான சூழலில் விருந்தில் பங்கேற்றது பொறுப்பற்ற செயல் என அந்நாட்டு எதிர்க்கட்சிகள் விமர்சித்துள்ளன.

# உலகக்கிண்ணத் தொடருக்கு தகுதிபெற்றது இலங்கை

ஐ.சி.சி. உலகக்கிண்ண தகுதிகாண் தொடரில் சிம்பாப்வே அணிக்கெதிரான ஆட்டத்தில் 9 விக்கெட்களினால் இலகு வெற்றிபெற்ற இலங்கை அணி இந்தியாவில் நடைபெறவுள்ள ஐ.சி.சி. உலகக்கிண்ணத் தொடருக்குத் தகுதிபெற்றுள்ளது.




சுப்பர் சிக்ஸ் சுற்றின் இலங்கை – சிம்பாப்வே அணிகள் இடையிலான போட்டி நேற்று முன்தினம் புலவாயோ நகரில் நடைபெற்றது. போட்டியின் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணி முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சிம்பாப்வே அணி தமது இறுதி 5 விக்கெட்டுகளையும் 38 ஓட்டங்கள் என்ற இடைவெளியில் பறிகொடுத்து 32.2 ஓவர்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 165 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது.

வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்ட 166 ஓட்டங்களை அடைய பதிலுக்குத் துடுப்பாடிய இலங்கை அணி வெற்றி இலக்கை 33.1 ஓவர்களில் ஒரு விக்கெட்டை மாத்திரம் இழந்து 169 ஓட்டங்களுடன் அடைந்தது. போட்டியின் ஆட்டநாயகனாக இலங்கை அணி சார்பில் அபாரமாகப் பந்துவீசிய மகீஷ் தீக்‌ஷன தெரிவானார்.

இலங்கை அணியின் இந்த வெற்றியின் மூலம் முதல் அணியாக தகுதிகாண் தொடரின் மூலம் உலகக்கிண்ணத் தொடருக்கு தகுதிபெற்றது.

Sri Lanka Cricket
தேசிய கிரிக்கெட் அணியின் உத்தியோகபூர்வ அனுசரணையாளர்
Dialog

# திருகோணமலை மாவட்ட கிரிக்கெட் சுற்றுத்தொடர்



கிண்ணியா நிருபர்

கடந்த மூன்று மாதங்களாக திருகோணமலை மாவட்ட கிரிக்கெட் சங்கத்தினால் நடைபெற்றுவந்த கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதிப்போட்டி அண்மையில் திருகோணமலையில் நடைபெற்றது.

இறுதிப் போட்டியில் Hindu CC vs Zodiac CC அணிகள் மோதின. விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் ஒரு விக்கெட் வித்தியாசத்தில் Zodiac CC அணி வெற்றி வாகை சூடியது. இப்போட்டியின் ஆட்ட நாயகன் விருதை ஷானிக்க மலிந்த பெற்றுக் கொண்டார்.

இத் தொடரின் ஆட்ட நாயகன் விருதை Hindu CC அணியின் வீரர் ஹரிசனும், சிறந்த துடுப்பாட்ட வீரராக (Zodiac CC) தக்சனனும் தொடரின் சிறந்த பந்து வீச்சாளராக ஷானிக்க மலிந்த (Zodiac CC)வும், சிறந்த களத்தடுபாளர் ஆக பனுஷந்த் (Spence) தும் தெரிவுசெய்யப்பட்டனர். இத் தொடரின் அனைத்து ஆட்ட நாயகன் கிண்ணங்களையும் இறுதி போட்டிக்கான அனைத்து கிண்ணங்களையும் Trinco Aid நிறுவனம் வழங்கிவைத்தது.

# ஏறாவூர் சமுர்த்தி சமுதாய அமைப்புகளின் ஏற்பாட்டில் நடைபெற்ற மென்பந்து கிரிக்கெட் தொடர்



மட்டக்களப்பு நிருபர்

ஏறாவூர் நகர பிரதேச செயலகப் பிரிவில் சமுர்த்தி சமுதாய அமைப்புகளின் ஏற்பாட்டில் இள வயதினருக்கான அழகான ஒரு செய்தி என்ற தொனிப்பொருளின் கீழ் சமுர்த்தி சமுதாய அமைப்புக்களுக்கான விளையாட்டு வேலைத்திட்டத்தின் ஓர் அங்கமாக மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி கடந்த வாரம் ஏறாவூர் மீராகேணி அல் பக்தாத் மைதானத்தில் இடம்பெற்றது.

மிச்நகர், ஐயங்கேணி, மீராகேணி ஆகிய 3 வட்டாரங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அணிகள் பங்கேற்றன. இதில் மீராகேணி வட்டார அணியினர் சம்பியனாக வெற்றி பெற்றதுடன், வெற்றிபெற்ற அணிகளுக்கும் வீரர்களுக்கும் கிண்ணங்களும் பரிசில்களும் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக பிரதேச செயலாளர் நிஹாறா மௌஜூத் கலந்து கொண்டதுடன், பிரதேச செயலக சமுர்த்தி தலைமையக முகாமையாளர் கணேசராஜா, முகாமைத்துவப் பணிப்பாளர் ஆர். எம். றுமைஸ், சமுர்த்தி வங்கி முகாமையாளர்கள், சமுர்த்தி அபிவிருத்தி மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பிரதேச விளையாட்டு வீரர்கள் எனப் பலர் பங்குபற்றினர்.

விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com



**அங்குராங்கெத்த பொரமடுல்ல தேசிய பாடசாலை விளையாட்டு மைதானத்தில் மாவட்ட ரீதியில் பாடசாலைகளுக்கிடையே நடை பெற்ற டி.எஸ்.ஐ. கரப்பந்தாட்டப் போட்டிகளில் லிந்துலை சரஸ்வதி பாடசாலை 15 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான போட்டியில் முதலாவது இடத்தையும் 19 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான போட்டியில் முதலாவது இடத்தையும் 17 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான போட்டியில் இரண்டாம் இடத்தையும் பெற்று தேசிய மட்டத்தில் நடைபெறும் போட்டிகளுக்குத் தெரிவாகி நுவரெலியா கல்வி வலயத்திற்கு பெருமை சேர்த்துள்ளது. இந்த மாணவர்களுக்கும் பயிற்றுவித்த ஆசிரியர் வி.கேதீஸ் உட்பட அனைவருக்கும் பாடசாலை நிர்வாகம் வாழ்த்து தெரிவித்துள்ளது.**

**படம்:** *தலவாக்கலை நிருபர்*

# ஸ்டோக்ஸின் போராட்டம் வீண்: மீண்டும் த்ரில் வெற்றியீட்டிய ஆஸி.

விறுவிறுப்பாக நடைபெற்ற ஆஷஸ் இரண்டாவது டெஸ்டில் அவுஸ்திரேலிய அணி 43 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இங்கிலாந்தை வீழ்த்தியது.

லார்ட்ஸில் நடைபெற்ற பரபரப்பான ஆட்டத்தில் இங்கிலாந்து அணி கடைசி நாளில் வெற்றிக்காகப் போராடியது. குறிப்பாக, அந்த அணியின் கேப்டன் பென் ஸ்டோக்ஸ் தனியொருவனாய் நின்று, சிக்ஸர்களைப் பறக்கவிட்டு வாணவேடிக்கை காட்டினார்.

94 ஓட்டங்களில் இருந்தபோதும் அவர் பயமில்லாமல் சிக்ஸர் அடித்து சதத்தைப் பூர்த்தி செய்தார். அதன் பின்னர் அவரது வேகத்தை அவுஸ்திரேலிய பந்துவீச்சாளர்களால் கட்டுப்படுத்த முடியவில்லை. சிக்ஸர் மழை பொழிந்த ஸ்டோக்ஸ் அதிரடியாக 150 ஓட்டங்களை எட்டினார். ஆனால், அவர் 155 ஓட்டங்களில் இருந்தபோது கேரியிடம் பிடி கொடுத்து வெளியேறினார். இதனால் இங்கிலாந்தின் வெற்றி மங்கியது.

அதனை உறுதிப்படுத்தும் வகையில் விக்கெட்டுகளும் சரிந்தன. இறுதியில் கடைசி விக்கெட்டை ஸ்டார்க் கைப்பற்ற, இங்கிலாந்து 327 ஓட்டங்களுக்கு ஆல் அவுட் ஆனது. ஸ்டார்க், கம்மின்ஸ், ஹேசல்வுட் தலா 3 விக்கெட்டுகளும், கிரீன் ஒரு விக்கெட்டும் வீழ்த்தினர். இந்த வெற்றியின் மூலம் அவுஸ்திரேலியா 2-0 என முன்னிலை வகிக்கிறது. முதல் ஆட்டத்திலும் ஆஸி. அணி த்ரில் வெற்றியீட்டியமை குறிப்பிடத்தக்கது.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7